


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## மே - 2019

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

## முடியாது என எதையும் விட்டு விடாதே..!!

## முயன்றுபார் நிச்சயம் முடியும்..!!

Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone : 8939144344,8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block, 7th Main Road,
Annanagar,(Next To Metro Water Pump),
Chennai, Tamil Nadu 600040.

3rd Floor,West Wing,Gokul Arcarde,
No.2,Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


04 - 08 தமிழக நிகழ்வுகள்

08 - 25 இந்திய நிகழ்வுகள்

25 - 40 உலக நிகழ்வுகள்

40 - 42 விருதுகள்

42 - 46 நியமனங்கள்

46 - 54 அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

54 - 61 விளையாட்டு நிகழ்வுகள்

61 - 63 வர்த்தக நிகழ்வுகள்

63 - 72 முக்கிய தினங்கள்

72 புத்தகங்கள்












# தமிழக நிகழ்வுகள்

1. தகவல் அறியும் உரிமைச் சட்டம் எப்போது நடைமுறைக்கு வந்தது?

**விடை**: அக்டோபர் 12, 2005

**விளக்கம்**

- தகவல் பெறும் உரிமைச் சட்டம் தமிழ்நாடு இரண்டாமிடம்
    - தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களை பெறும் மாநிலத்தில் தமிழ்நாடு இரண்டாம் இடம் வகிக்கிறது.
    - தகவல் அறியும் உரிமைச் சட்டம் அக்டோபர் 12, 2005 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது

2. எதற்கு தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தல் நடத்த முடியவில்லை என தமிழக அரசு விளக்கம் தெரிவித்துள்ளது?

**விடை**: வாக்காளர் பட்டியல் தயாராகாத காரணத்தால்

**விளக்கம்**

- வாக்காளர்கள் பட்டியல் தயாராகாத காரணத்தாலேயே தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தல் நடத்த முடியவில்லை என உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு விளக்கம் தெரிவித்துள்ளது

3. அமேசான் நிறுவனம் சார்பில் நடைபெற்ற நெடும் படைப்பு போட்டியில் வெற்றி பெற்றவர் யார்?

**விடை** : செந்தில் பாலன்

**விளக்கம்**

- அமேசான் நிறுவனம் சார்பில் நடைபெற்ற நெடும் படைப்பு போட்டியில் செந்தில் பாலன் வெற்றி பெற்றுள்ளார்
    - அமேசான் நிறுவனம் உலகளாவிய அளவில் நடத்திய போட்டியில் தமிழ் மொழிக்கான நெடும் படைப்பு போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.
    - "பரங்கிமலை இரயில் நிலையம்" என்ற புதினத்திற்காக தேர்வாகியுள்ளார்.

4. ஃபானி புயலால் மிகவும் பாதிக்கப்பட்ட மாநிலம்?

**விடை** : ஒடிஸா

**விளக்கம்**

- ஃபானி புயலால் பாதிக்கப்பட்ட ஒடிஸா மாநிலத்திற்கு புயல் நிவாரணமாக ரூ.10 கோடி நிதியுதவியை தமிழக அரசு அறிவித்துள்ளது.
    - கடந்த 20 ஆண்டுகளில் ஒடிஸாவை தாக்கிய மிகப் பெரிய புயலாகும். மணிக்கு 245 கி.மீ வேகத்தில் வீசியது காற்று.

5. எந்த தனியார் தொழிற்சாலையில் பறவைகள் சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது?

**விடை** : டி.வி.எஸ் தொழிற்சாலை

**விளக்கம்**

- ஒசூர் தனியார் தொழிற்சாலையில் பறவைகள் சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது.
    - டி.வி.எஸ் தொழிற்சாலையில் 50 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.
    - இச்சரணாலயத்தில் 120 வகையான பறவைகள் தங்கியுள்ளன.

6. பெண்களின் பாதுகாப்புகாக மத்திய அரசு அறிமுகபடுத்திய இலவச தொலைபேசி சேவை எண் என்ன?

**விடை**: 181

**விளக்கம்**

- பெண்களின் பாதுகாப்புக்காக தொடங்கப்பட்ட 181 இலவச தொலைபேசி சேவையை கண்காணிக்க குழு அமைப்பதற்கு சமூகநலத் துறை திட்டமிட்டுள்ளது.
    - பெண்களின் பாதுகாப்புக்காக மத்திய அரசு அறிமுகப்படுத்திய 181 இலவச தொலைபேசி சேவை கடந்த ஆண்டு டிசம்பர் 10-ம் தேதி தமிழகத்தில் தொடங்கப்பட்டது. சென்னை அம்பத்தூரில் உள்ள அம்மா கால் சென்டர் மையத்தின் ஒரு பகுதியில் 181 இலவச தொலைபேசி எண்ணுக்கான மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தில் மனநல ஆலோசகர்கள், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். குடும்ப வன்முறை, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்து பாதிக்கப்பட்ட பெண்கள் 181 இலவச தொலைபேசி சேவையில் அழைத்து தெரிவித்து வருகின்றனர்.

7. இயற்கை மற்றும் வனவாழ் உயிரின அறக்கட்டளை கணக்கெடுப்பு எப்போது நடைமுறைக்கு வந்தது?

**விடை**: 1929-ஆம் ஆண்டு முதல்

**விளக்கம்**

- சேலம் மாவட்டத்தில் உள்ள கிழக்கு தொடர்ச்சி மலைத்தொடர் உள்ளிட்ட பகுதிகளில் 308 வகை பறவைகள் உயிர் வாழ்வதாக சேலம் இயற்கை மற்றும் வனவாழ் உயிரின அறக்கட்டளை நடத்திய கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது.
    - 1929- ஆம் ஆண்டு முதல் இந்த கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது.

**8.** பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு 10% இடஒதுக்கீடு வழங்க அரசியலமைப்புச் சட்டத்தின் எந்த விதிகளை அரசு சட்ட திருத்தம் செய்துள்ளது?

**விடை**: விதி 15 மற்றும் 16.

**விளக்கம்**

- பொருளாதார ரீதியில் பின்தங்கிய பொதுப்பிரிவினருக்கு 10% இடஒதுக்கீட்டுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக அரசு வருவாய் துறை வெளியிட்டுள்ளது.
    - தற்போது நடைமுறையில் உள்ள இடஒதுக்கீட்டுக்கான வரம்புக்குள் வராமல் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.8 லட்சத்துக்குள் வருபவர்கள் இந்த இடஒதுக்கீட்டை பெற முடியும்.
    - இதனை நடைமுறைப்படுத்த இந்திய அரசு அரசியலமைப்பு பிரிவு 15 மற்றும் 16–யை சட்ட திருத்தம் செய்துள்ளது.

9. வாடகை நீதிமன்றங்கள் எந்த சட்டத்தின் கீழ் தொடங்கப்பட உள்ளது?

**விடை** : தமிழ்நாடு உரிமைகள் ஒழுங்குமுறைகள் மற்றும் குத்தகையாளர் மற்றும் நில உரிமையாளர்

**விளக்கம்**

- வாடகை மற்றும் ஒப்பந்தங்கள் தொடர்பான வழக்குகளுக்கு தீர்வு காண்பதற்காக தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட 32 மாவட்டங்களிலும் வாடகை நீதிமன்றங்களை உருவாக்க தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசாணை பிறப்பித்துள்ளது. இவை, தமிழ்நாடு உரிமைகள்

ஒழுங்குமுறைகள் மற்றும் குத்தகையாளர் மற்றும் நில உரிமையாளர்களின் பொறுப்புகள் சட்டம், 2017 இன் பிரிவு 32 இன் படி அமைக்கப்பட்டுள்ளன.

10. 82 கி.மீ தூரத்தை 3 மணி நேரத்தில் சைக்கிளில் கடந்து சாதனை புரிந்த மாணவர் யார்?

**விடை** : அபிநவ்

**விளக்கம்**

- புதுச்சேரியில் இருந்து மாமல்லபுரம் வரை 82கி.மீ தூரத்தை 3 மணி நேரத்தில் சைக்கிளில் கடந்து 7 வயது மாணவர் அபிநவ் சாதனை புரிந்தார்.

11. "எமிஸ்" இணையதளம் தமிழக அரசின் எந்த துறையால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது?

**விடை**: பள்ளிக் கல்வித்துறை

**விளக்கம்**

- மாற்று சான்றிதழ்களில் சாதியை குறிப்பிடக்கூடாது என்று பள்ளிக் கல்வித் துறை உத்தரவு பிறப்பித்துள்ளது
    - தமிழக பள்ளிக் கல்வி துறையின் "எமிஸ்" இணையதளம் மூலம் இனி வழங்கப்படும் மாற்று சான்றிதழ்களில் சாதியின் பெயர் குறிப்பிடப்படாது என பள்ளி கல்வித்துறை தெரிவித்துள்ளது.

12. "ஆயுஷ்மான் பாரத்" திட்டம் மூலம் நாடு முழுவதும் எத்தனை கோடி பேர் பயனடைவர்?

**விடை**: 50 கோடி பேர்

**விளக்கம்**

- மத்திய அரசின் மருத்துவ காப்பீட்டு திட்டமான "ஆயுஷ்மான் பாரத்" திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசிற்கு ரூ.293 கோடியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.
    - நாடு முழுவதும் 50 கோடி பேருக்கு மருத்துவ காப்பீடு அளிக்கும் திட்டம் "ஆயுஷ்மான் பாரத்" ஆகும்.

13. புற்றுநோய் எதிர்ப்பு சேர்மங்களை கொண்டிருந்து காப்புரிமை பெறப்பட்ட காளானின் பெயர் என்ன?

**விடை**: லெண்டினஸ் டியுபெரேஜியம்

**விளக்கம்**

- இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் காட்டுக் காளான் வகைகளிலிருந்து புற்றுநோய் எதிர்ப்புச் சேர்மங்களை பிரித்தெடுப்பதற்கான காப்புரிமை வழங்கப்பட்டது. இதனை மெட்ராஸ் பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் வெங்கடேசன் கவியரசனும் அவரது முனைவர்க்கு பயிலும் மாணவர் து.மஞ்சுநாதனும் கண்டறிந்துள்ளனர். Lentinus tuberregium என்பது அவர்கள் கண்டறிந்த காளான் வகையாகும்

# இந்திய நிகழ்வுகள்

1. மாவ்லூஹ் குகை எங்கு அமைந்துள்ளது?

**விடை**: மேகாலயா

**விளக்கம்**

- இந்திய புவியியல் ஆய்வு மையத்தின் (GST) வடகிழக்கு பிராந்தியம் (NER) மேகாலயாவில் உள்ள இரண்டு குகைகளில் இருக்கும் புவியியல் தகவல்களை ஆராய புவியில் காட்சி பலகைகள் நிறுவப்பட்டன.
    - மாவ்லூஹ் குகை (Mawmluh cave) மற்றும் தெரியகஹத் (Therriaghat) குகைகளே அந்த இரண்டு முக்கிய புவியியல் தளங்களாகும்

2. இந்தியாவில் மிகபெரிய ஸ்டாக்கே சிற்பம் எங்கு கண்டுபிடிக்கப்பட்டது?

**விடை**: தெலுங்கானாவின் சூர்யபீட்டிலுள்ள பனிகிரி என்ற இடத்தில்

**விளக்கம்**

- இந்திய தொல்பொருள் ஆய்வாளர்கள் சமீபத்தில் தெலுங்கானா சூர்யபீட்டிலுள்ள பனிகிரி என்ற இடத்தில் பௌத்த தளத்தில் இருந்து ஸ்டாக்கோ சிற்பத்தை கண்டுபிடித்தனர்
    - அந்த துறை அதிகாரிகளின் படி, இது ஜடாகாசக்ரத்தின் போதிசத்வாவில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது
    - இது இந்தியாவில் இருந்து கிடைத்த மிகப்பெரிய ஸ்டாக்கோ சிற்பம் ஆகும்.

3. எத்தனை மொழிகளில் நீட் தேர்வு நடைபெறுகிறது?

**விடை**: 11

**விளக்கம்**

- நாடு முழுவதும் மருத்துவ படிப்புக்கான நீட் தேர்வு இன்று நடைபெறுகிறது.
    - தேசிய தேர்வுகள் முகமை நீட் தேர்வை நடத்துகிறது.
    - தமிழ் ஆங்கிலம், ஹிந்தி உள்பட 11 மொழிகளில் நீட் தேர்வு நடைபெறுகிறது.
    - ஃபானி புயலால் ஒடிஸாவில் ஒத்திவைப்பு.

4. பாதுகாப்பு கையகப்படுத்தல் மன்றத்தின் (Defence Acquisition Council) தலைவர் யார்?

**விடை**: நிர்மலா சீதாராமன் (பாதுகாப்பு துறை அமைச்சர்)

**விளக்கம்**

- வான்வழி அச்சுறுத்தல்களுக்கு எதிராக தனது திறனை அதிகரிக்க ரஷ்யாவிடம் இருந்து காமோ - 31 (kamov - 31) ஹெலிகாப்டர்களை வாங்க பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
    - திட்டத்திற்காக 3600 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
    - நிர்மலா சீதாராமன் தலைமையிலான பாதுகாப்பு கையகப்படுத்தல் மன்றத்தின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

5. இந்திய கப்பல் படையில் தற்போது உள்ள விமானம் தாங்கி போர் கப்பல் எது?

**விடை** : INS விக்ரமாதித்யா

**விளக்கம்**

- அதி நவீன விமானம் தாங்கி போர் கப்பலை கட்டமைக்க இந்தியா-பிரிட்டன் இடையே பேச்சுவார்த்தை
    - பிரிட்டனின் குயின் எலிசபெத் கப்பலை போன்று அதிநவீன விமானம் தாங்கி கப்பலை உருவாக்க திட்டம்.
    - இந்தியாவிடம் ஏற்கெனவே 45,000 டன் எடையுள்ள INS விக்ரமாதித்யா கப்பல் உள்ளது. இது 2004-ம் ஆண்டு ரஷ்யாவிடம் இருந்து வாங்கப்பட்டது.

6. அதிநவீன அப்பாச்சி கார்டியன் ஹெலிகாப்டரை வாங்க இந்திய விமானப் படை எந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது?

**விடை**: போயிங் நிறுவனம்.

**விளக்கம்**

- முதல் அதிநவீன அப்பாச்சி கார்டியன் ஹெலிகாப்டரை இந்திய விமான படையிடம் வழங்கியது அமெரிக்காவின் போயிங் நிறுவனம்.
    - இந்திய விமானப் படையும், அமெரிக்க அரசு மற்றும் போயிங் நிறுவனத்துடன் AH – 64 E (I) – அப்பாச்சி கார்டியன் ரக ஹெலிகாப்டர்களை வாங்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

7. உலகின் முதலாவது பிராந்திய மகளிர் கிரிக்கெட் பத்திரிக்கை "CRICZONE" எங்கு தொடங்கப்பட்டுள்ளது?

**விடை**: இந்தியா

**விளக்கம்**

- உலகின் முதலாவது பிராந்திய மகளிர் கிரிக்கெட் பத்திரிக்கை "CRICZONE" இந்தியாவில் தொடங்கப்பட்டுள்ளது.
    - இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் துணை கேப்டன் ஸ்மிருதி மந்தனா பத்திரிக்கையை தொடங்கி வைத்துள்ளார்.

8. இந்திய பாதுகாப்பு துறை ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு DRDO உருவாக்கியுள்ள ஆளில்லா விமானத்தின் பெயர் என்ன?

**விடை**: அபியாஸ் (ABHYAS)

**விளக்கம்**

- எதிரி நாட்டு விமானங்கள் உள்ளிட்ட வான் இலக்குகளை துல்லியமாகத் தாக்கி அழிக்கும் அப்யாஸ் (ABHYAS) ஆளில்லா விமானத்தை பாதுகாப்பு துறை ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு (DRDO) வெற்றிகரமாக சோதித்தது.
    - பாலஷோர் பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை வரம்பு பகுதியில் இந்த சோதனை நடத்தப்பட்டது

- தற்போதைய DRDO தலைவர் G. சத்தீஸ் ரெட்டி முன்னிலையில் சோதனை நிகழ்த்தப்பட்டது

9. பிரசார் பாரதி அமைப்பின் தலைவர் யார்?

**விடை**: சூர்ய பிரகாஷ்

**விளக்கம்**

- தூர்தர்ஷன் அமேசான் இந்தியாவுடன் இணைந்து இணையத்தில் “சோவினிர்” என்ற இணையதள வர்த்தகத்தை துவக்கியுள்ளது.
  - இந்த இணைய சேவையை தொடங்கிய முதல் இந்திய ஒளிபரப்பு குழுமம் தூர்தர்ஷன் ஆகும்.
  - பிரசார் பாரதி அமைப்பின் தலைவர் “சூர்ய பிரகாஷ்” இதனை தொடக்கி வைத்தார்.

10. ஐ.நா-வுக்கான நைஜீரிய தூதர் யார்?

**விடை**: திஜானி முகமது பாண்டே

**விளக்கம்**

- ஐ.நா பொது சபையின் அடுத்த தலைவராக ஐ.நா-வுக்கான நைஜீரியத் தூதர் திஜானி முகமது பாண்டே தேர்ந்தெடுக்க இந்தியா தனது ஆதரவை தெரிவித்துள்ளது என ஐ.நா-வுக்கான இந்திய சையது அக்பருதீன் தெரிவித்தார்
  - 74-வது ஐ.நா பொதுசபை கூட்டத்துக்கு, திஜானி முகமது பாண்டேவை தலைவராக நியமிக்க இந்தியா முயற்சி

11. இந்தியாவின் 14-வது பிரதமர் யார்?

**விடை:** நரேந்திர மோடி

**விளக்கம்**

- நடந்து முடிந்த 17- வது மக்களவைக்கான தேர்தலில், நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை ஆட்சி அமைக்க ராம்நாத் கோவிந் அழைப்பு விடுத்துள்ளார்
  - இந்தியாவின் 14-வது பிரதமராக மோடி மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுள்ளார்

12. “எதிர்கட்சி தலைவர்” என்ற பதவி எந்த ஆண்டு சட்டபூர்வ அங்கீகாரம் பெற்றது?

**விடை**: 1977

**விளக்கம்**

- 17- வது மக்களவை எதிர்கட்சி தலைவர் இல்லாமல் செயல்படவிருக்கிறது.
  - 1977- ம் ஆண்டின் எதிர்க் கட்சித் தலைவரின் ஊதியம் மற்றும் படிகள் என்ற பாராளுமன்ற சட்டத்தின் மூலம் “எதிர்க் கட்சி தலைவர்” என்ற பதவி சட்டபூர்வ அங்கீகாரம் பெற்றது.
  - எதிர்கட்சி தலைவராக குறைந்தபட்சம் 55 உறுப்பினர்களை கொண்டிருக்க வேண்டும்.
  - மக்களவையின் முதல் அதிகாரப்பூர்வ எதிர்கட்சித் தலைவர் “ராம் சுபங் சிங்” ஆவார்

13. நிகழாண்டின் ஷிருய் லில்லி திருவிழா, எந்த மாநிலத்தில் கொண்டாடப்பட்டது?

**விடை**: மணிப்பூர்

**விளக்கம்**

- ஏப்.28 அன்று மணிப்பூரில் உள்ள உக்ருள் மாவட்டத்தில், ஷிருய் லில்லி விழாவின் 2வது பதிப்பு கொண்டாடப்பட்டது. ஆழிவின் விளிம்பிலிருக்கும் ஷிருய் லில்லியின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உக்ருள் மாவட்டத்தை மணிப்பூர் மாநிலத்தின் ஒரு சுற்றுலாத்தலமாக ஊக்குவிக்கவும் வேண்டி மணிப்பூர் மாநில சுற்றுலாத்துறையால் இந்த விழா நடத்தப்படுகிறது.

12. ஹரியானா மாநிலத்தின் தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசி குறித்த பரப்புரைக்காக நல்லெண்ண தூதராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய துப்பாக்கி சுடும் வீரர்/வீராங்கனை யார்?

**விடை:** கௌரி ஷியோரன் (Gauri sheoran)

**விளக்கம்**

- சர்வதேச துப்பாக்கி சுடு வீராங்கனை கௌரி ஷியோரனை ஹரியானா மாநில அரசு தனது தட்டம்மை மற்றும் ரூபெல்லா (MR) தடுப்பூசி பரப்புரைக்கான நல்லெண்ண தூதராக (Brand Ambassador) நியமித்துள்ளது. தட்டம்மை மற்றும்

ரூபெல்லா தடுப்பூசி பரப்புரை நிகழ்வின் தொடக்கத்தின்போது அம்மாநில முதல்வர் மனோகர் லால் கட்டார் இதனை அறிவித்தார்.

- இப்பரப்புரையின் கீழ், சுமார் 80 லட்சம் குழந்தைகளுக்கு (9 மாதம் முதல் 15 வயது வரை) தடுப்பூசி செலுத்தப்படும். இப்பரப்புரைக்காக 11 நடமாடும் மருத்துவ அலகுகளை முதல்வர் கொடியசைத்து தொடங்கிவைத்தார். பரப்புரையின் மூலம், 2020-ம் ஆண்டளவில் நாட்டில் தட்டம்மையை முற்றாக ஒழிப்பதையும் ரூபெல்லாவை கட்டுக்குள் கொண்டு வருவதையும் அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

13. உயிரித்தொழில்நுட்பம் குறித்து இந்திய அரசுக்கும் எந்த சர்வதேச அமைப்பிற்கும் இடையே சட்டரீதியான உடன்படிக்கை கையெழுத்தாகியுள்ளது?

**விடை**: உலக வங்கி

**விளக்கம்**

- இந்தியாவில் வளர்ந்துவரும் உயிரித்தொழிநுட்ப நிறுவனங்களைப் பலப்படுத்தும் வகையில், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரித் தொழிநுட்பத் துறை, அனைவரையும் உள்ளடக்கிய கண்டுபிடிப்புகளை விரைவுபடுத்தவும் உயிரித்தொழிநுட்பத் தொழிற்முனைவோருக்கு அதிகாரமளிக்கவும் உயிரி மருந்து உற்பத்திக் கண்டுபிடிப்பு ஆராய்ச்சியை விரைவுபடுத்த தொழில்துறை மற்றும் கல்வித்துறை இணைப்புக்கான இயக்கம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.
    - இவ்வியக்கம் $250 மில்லியன் டாலர் மொத்தச் செலவில், 50% உலகவங்கிக் கடனுடன் மேற்கொள்ளப்படும். உயிரி மருந்து உற்பத்திக்கான சிறந்த, மலிவான, புதுமையான வடிவமைப்பு மற்றும் உற்பத்தித் தொகுப்பாக இந்தியாவை ஆக்குவதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.

14. இந்தியாவில் நீண்ட காலமாக முதல்வராக இருந்தவர் யார்?

**விடை**: பவன் சாம்லிங்

- சிக்கிமின் முதல்வர் பவன் சாம்லிங் இந்திய அரசியல்வாதிகளில் புதிய சாதனையைப் படைத்துள்ளார். தொடர்ந்து அதிக ஆண்டுகள் மாநில முதல்வராக இருந்த சாதனையை அவர் பெற்றுள்ளார். சிக்கிம் ஜனநாயக

முன்னணியின் தலைவராக அவர், 1994 டிசம்பர் 12ல் முதல்வரானார். அதன்பிறகு தொடர்ந்து 5வது முறையாக அவர் ஆட்சிசெய்து வருகிறார்.

- நீண்ட காலம் முதல்வராக இருந்த மேற்கு வங்க முன்னாள் முதல்வர் மறைந்த மார்க்சிஸ்ட் கம்யூஸ்ட் தலைவர் ஜோதிபாசுவின் சாதனையை சாம்பிலிங் ஏப்.29 அன்று முறியடித்தார். 23 ஆண்டுகள் 4 மாதங்கள், 17 நாட்கள் ஜோதிபாசு முதல்வராக இருந்துள்ளார்.

15. NITI ஆயோக் அடல் புதிய இந்தியா சவால் திட்டத்தை எப்போது தொடங்கியது?

**விடை** ஏப்ரல் 26

**விளக்கம்**

- அடல் கண்டுபிடிப்பு இயக்கத்தின் கீழ், NITI ஆயோக் அமைப்பு, அடல் புதிய இந்தியா சவால் என்ற திட்டத்தை ஏப்ரல் 26 அன்று தொடங்கியது. ஐந்து துறைகளின் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும் அடல் புதிய இந்தியா சவால் திட்டத்திற்காக, அடல் கண்டுபிடிப்பு இயக்கம், புதிய கண்டுபிடிப்பாளர்கள் / குறு, சிறு, நடுத்தரத் தொழில்முனைவோர் / எழுமின் ஆர்வலர்கள் மூலம் சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற பொருட்கள் வடிவமைக்கப்படவுள்ளது.
  - பருவநிலைக்கு உகந்த நவீன வேளாண்மை, நவீனப் போக்குவரத்துச் சாதனங்கள், வாகனப் பராமரிப்பு, கழிவுமேலாண்மை போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட 17 பிரிவுகளில் வெட்டு விளிம்பு தொழில்நுட்பம் (Cutting Edge Technology) அல்லது முன்மாதிரி தொழிநுட்பத்தைப் பயன்படுத்திக் கண்டுபிடிப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

16. இந்தியாவின் கடற்படை பயிற்சியான வருணா 19.1 எந்த நாட்டுடன் இணைந்து நடத்தப்படுகிறது?

**விடை**: பிரெஞ்சு

**விளக்கம்**

- இந்தியா – பிரெஞ்சு நாடுகளுக்கிடையே கடற்படை பயிற்சியான வருணா 19.1, கோவாவில் மே 1 முதல் 10 வரை நடைபெறுகிறது.
  - இது 2 கட்டங்களில் நடைபெறுகின்றது.
  - வருணா 19.2 என்ற இரண்டாவது பயிற்சியானது மே இறுதியில் ஜிபூட்டியில் நடைபெறவுள்ளது.

17. சமீபத்தில் இந்திய பாதுகாப்பு அமைச்சகத்தால் கடற்படைக்கு ஒப்புதல் கொடுக்கப்பட்ட ஹெலிகாப்டர்கள் எது?

**விடை**: காமோவ் கா – 31

**விளக்கம்**

- இந்திய கடற்படைக்கு 10 "காமோவ் கா-31" (Kamov ka – 31) என்னும் வான்வழி ஆரம்ப எச்சரிக்கை மற்றும் கட்டுப்பாடு ஹெலிகாப்டர்களை வாங்குவதற்கான ஒப்புதலை பாதுகாப்பு அமைச்சகம் அளித்துள்ளது.
    - இதனுள் INS விக்ராண்ட் (INS Vikrant) மற்றும் கிரிகோரோவிச் வகை போர்க்கப்பல்களும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது மற்றும் இதற்காக ரூ. 3600 கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

18. சந்திராயன் -2 எத்தனை தொகுதிகளை கொண்டுள்ளது?

**விடை:** 3

**விளக்கம்**

- ஜீலை 9 முதல் ஜீலை 16, 2019 க்குள் சந்திராயன் விண்கலத்தை விண்ணில் ஏய்துவதற்கான நடவடிக்கை நடைபெற்று வருகிறது மற்றும் இது நிலவில் செப்டம்பர் - 6, 2019 அன்று தரையிரங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
    - இந்தியாவின் இரண்டாவது திட்டமான இது மூன்று தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
    - ஆர்பிட்டர், லேண்டர் (விக்ரம்) மற்றும் ரோவர் (பிரக்யான்) என்பதாகும்.

19. எந்த வகை வாகனங்களில் பச்சைநிற பலகைகள் பயன்படுத்தப்படும்?

**விடை**: மின்சார வாகனம்

**விளக்கம்**

- மத்திய அரசானது அனைத்து மாநில போக்குவரத்து துறைகளுக்கும் அனைத்து வகையான பழைய மற்றும் புதிய மின்சார வாகனங்களுக்கும் பச்சைநிற பலகைகளை பயன்படுத்த உத்தரவிட்டுள்ளனர்.
    - இது பச்சைநிற பலகை கொண்ட வாகனங்களுக்கு சிறப்பு சலுகைகளாக பார்கிங், இலவச நெடுஞ்சாலைகளில் நுழைவு மற்றும் சுங்கவரியில் சலுகை போன்றவை அளிப்பதற்கு உதவும் என்பது குறிப்பிடத்தக்கது.

20. சீனா - இந்தியா இடையிலான எல்லை வர்த்தகத்தின் 14-வது பதிப்பு எங்கு நடைபெற்றது?

**விடை**: நாதுலா

**விளக்கம்**

- நாதுலாவில் 14-வது பதிப்பான வருடாந்திரம் நடைபெறும் சீனா - இந்தியா எல்லையில் வர்த்தகம் நடைபெற்றது.
    - இது மே 1 முதல் நவம்பர் 30 வரை வாரத்திற்கு 4 நாட்களாக 6 மாதங்கள் நடைபெறும்

21. உலக புகழ்பெற்ற சர்தாம் யாத்ரா எங்கு நடைபெறுகிறது?

**விடை**: உத்ரகாண்ட்

**விளக்கம்**

- உலக புகழ்பெற்ற சர்தாம் யாத்ரா உத்ரகாண்டில் தொடங்கியது.
    - கங்கோதரி மற்றும் யமுநோதரி யாத்ரீகர்களுக்காக திறந்து விடப்பட்டுள்ளது.
    - இது அட்சயா திரிதியை முன்னிட்டு கொண்டாடப்பட்டது.
    - யமுநோத்ரி, கங்கோத்ரி, கேதார்நாத் மற்றும் பத்ரிநாத் ஆகிய நான்கு யாத்ரீகஸ்தலங்களும் இணைத்து சர்தாம் என்றழைக்கபடுகின்றன.

22. “சின்பான் பைத்தக்” எந்த அமைச்சகத்தால் நடத்தப்பட்டது?

**விடை** : MNRE

**விளக்கம்**

- புதிய மற்றும் புதுப்பிக்கதக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE), புதுப்பிக்கதக்க எரிசக்தி துறையின் அனைத்து பங்குதாரர்களுக்கும் இடையில் நடத்தியது.
    - MNRE –ஆல் நடத்தப்பட்ட “சின்டான் பைத்தக்” கூட்டம் இதுவே முதல் முறையாகும்.

23. “Group Sail” கடற்பயிற்சியானது எங்கு நடைபெற்றது?

**விடை** : தென் சீனா கடல் பகுதியில்

**விளக்கம்**

- இந்தியாவின் இரு கடற்படை கப்பல்களான ஐ.என்.எஸ் கொல்கத்தா மற்றும் ஐ.என்.எஸ்.சக்தி ஆகியவை தென் சீனா கடல் பகுதியில் அமெரிக்கா ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் உடன் இணைந்து கடற்பயிற்சியில் ஈடுபட்டனர்.
    - இது மே 3 தொடங்கி மே 9 வரை நடைபெற்றது. மேலும் இதன் பெயர் “குரூப் செயில்” (Group Sail) என்பதாகும்.

24. வெசாகின் 16வது ஐக்கிய நாடுகளின் தின மாநாடு எங்கு நடைபெறுகிறது?

**விடை** : வியட்நாம்

**விளக்கம்**

- இந்தியாவின் துணை ஜனாதிபதியான வெங்கையா நாயுடு, 4 நாள் பயணமாக வியட்நாம் சென்றுள்ளார்.
    - அங்கு வெசாகின் 16வது ஐக்கிய நாடுகளின் தின மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளார்.
    - இந்த பயணம் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் இந்தியாவிற்கு உள்ள உறவை வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

25. துணிவு மற்றும் தலைமைத்துவத்துக்கான நடப்பாண்டின் மெக்கைன் நிறுவன விருதை வென்றுள்ளவர் யார்?

**விடை:** சாயா சர்மா

**விளக்கம்**

- நிர்பயா கூட்டு பாலியல் வன்புணர்வு & கொலை வழக்கின் விசாரணைக் குழுவிற்கு தலைமை தாங்கிய IPS அதிகாரி சாயா சர்மாவிற்கு 2019 துணிவு மற்றும் தலைமைத்துவத்துக்கான மெக்கைன் (McCain) நிறுவன விருது வழங்கப்பட்டுள்ளது.
    - தனது தொழில்துறை வாழ்க்கையில், உணர்ச்சிமிகு குற்றவியல் வழக்குகள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பின் புலனாய்வு குழுக்களுக்கு இவர் தலைமை தாங்கியுள்ளார்.

26. கர்நாடகா உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதி யார்?

**விடை:** அபை சீனிவாச ஒகா

**விளக்கம்**

- கா்நாடக உயா்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக நீதிபதி அபை சீனிவாச ஒகா பதவி ஏற்றார். கா்நாடக ஆளுநா் வஜூபாய் R வாலா, ஆளுநா் மாளிகையில் நீதிபதி ஒகாவுக்கு பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.
    - ஒலி மாசுபாடு நாத்திகவாதிகளின் உரிமைகள் மற்றும் அரசு விண்ணப்பப் படிவங்களில் 'மதம் அற்றவா்' எனக் குறிப்பிடும் உரிமை, மகாராஷ்டிராவில் மாட்டிறைச்சி தடை நீக்கல் மற்றும் சிறை சீா்திருத்தங்களை ஊக்குவித்தல் போன்றவை நீதிபதி ஒகாவின் குறிப்பிடத்தக்க தீா்ப்புகளாகும்.

27. வெவ்வெறு வண்ணங்களில் 10ரூ, 20ரூ, 50ரூ, 100ரூ, 200ரூ, 500ரூ, 2000ரூ தாள்களை அறிமுகம் செய்திருந்த வங்கி எது?

**விடை** : ரிசா்வ் வங்கி

**விளக்கம்**

- ரிசா்வ் வங்கியால் மீண்டும் புதிய ரூபாய் நோட்டுகள் அறிவிக்கப்பட்டது.
    - பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு பிறகு அரசாங்கம் புதிய ரூபாய் நோட்டுகளை அறிமுகம் செய்தது. வெவ்வெறு வண்ணங்களில் 10ரூ, 20ரூ, 50ரூ, 100ரூ, 200ரூ, 500ரூ, 2000ரூ தாள்களை அறிமுகம் செய்திருந்தது
    - தற்போது புதிய வடிவிலான 10ரூபாய் நோட்டை வெளியிட ரிசா்வ் வங்கி முடிவு செய்திருக்கிறது. இதில் கவா்னா் சக்திகாந்த தாஸின் கையெழுத்து மற்றும் 'பாரத்' என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட செக்யூரிட்டி திரட் இடம் பெற்றிருக்கும். இடது பக்கமாக அச்சிடப்படும் ஆண்டும், ஸ்வச் பாரத் லோகோவும் இடம் பெறும் என ரிசா்வ் வங்கி அறிவித்துள்ளது. மேலும் இந்த புது 10ரூபாய் தாள் வெளியானாலும் எப்போதும் போல பழைய 10ரூபாய் தாள்களும் செல்லுபடியாகும் என ரிசா்வ் வங்கி தெரிவித்துள்ளது.

28. சமீபத்தில் இந்திய விமானப்படை சோதனை செய்த ஏவுகணையின் பெயா் என்ன?

**விடை**: Brah Mos ஏவுகணை

**விளக்கம்**

- இந்திய விமானப்படை பிராமோஸ் (Brah Mos) காற்று வழி ஏவுகணையை Su-30 MK1 என்னும் போர் விமானத்தை கொண்டு வெற்றிகரமாக சோதனை செய்துள்ளனர்.

29. சர்வதேச பல்லுயிர்தன்மை தினத்தை முன்னிட்டு இந்திய விமான நிலையங்களில் நடத்தப்பட்ட பிரசாரத்தின் பெயர் என்ன?

**விடை**: Not all Animals migrate by choice

**விளக்கம்**

- சர்வதேச பல்லுயிர் தன்மை தினத்தையொட்டி இந்தியா முழுவதும் "அனைத்து விலங்குகளும் விருப்பத்தினால் இடம் பெயருவதில்லை" (Not all Animals migrate by choice) என்னும் பிரசார முயற்சின்மை அனைத்து விமான நிலையங்களில் நடத்தினர்.

30. லோக் சபா தேர்தலில் அதிகமான வாக்குப்பதிவு நடைபெற்ற ஆண்டு எது?

**விடை:** 2019

**விளக்கம்**

- இந்திய தேர்தல் ஆணையத்தின்படி, 2019 ஆம் ஆண்டின் லோக் சபா தேர்தலில் 67.10% (இடைக்கால) சதவீதம் வாக்குப்பதிவு நடைபெற்றது, இது பொதுத் தேர்தல்களின் வரலாற்றில் மிக அதிகமான வாக்குப்பதிவாகும்

31. இந்திய விமான படையில் போர் விமானியாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் யார்?

**விடை** : அவானி சதுர்வேதி

**விளக்கம்**

- அவானி சதுர்வேதி இந்திய விமான படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் போர் விமானி ஆவார்.

32. 2019 ஆண்டின் அதிக இணைய தாக்குதலால் பாதிப்படைய கூடிய நகரம் எது?

**விடை** : மும்பை

**விளக்கம்**

- 2019 ஆம் ஆண்டிற்கான இணைய தாக்குதலால் மிகவும் பாதிக்கப்பட கூடிய 15 நகரங்களின் பட்டியலில் மும்பை முதலில் உள்ளது.
    - அதனை தொடர்ந்து டெல்லி, பெங்களூர் மற்றும் கொல்கத்தா உள்ளது.
    - இதனை கூயிக் ஹில் பாதுகாப்பு ஆய்வகம் வெளியிட்டுள்ளது.
    - வருடாந்திர அச்சுறுத்தல் அறிக்கை 2019-இன் படி அதிக ஆபத்தில் மகாராஷ்டிரா, டெல்லி மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய நாடுகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

33. உலக பொருளாதார சூழ்நிலை மற்றும் வாய்ப்புகள் அறிக்கை யாரால் வெளியிடப்படும்?

**விடை** : ஐக்கிய நாடுகளால்

**விளக்கம்**

- ஐக்கிய நாடுகளால் வெளியிடப்படும் உலக பொருளாதார சூழ்நிலை மற்றும் வாய்ப்புகள் அறிக்கை – 2019இன் மத்திய ஆண்டு அறிவிப்பின் படி 2020-ஆம் ஆண்டில் இந்திய பொருளாதாரம் 7.1% வளர்ச்சி அடையும் என்று எதிர்பாக்கப்படுகிறது.
    - இது வலுவான உள்நாட்டு நுகர்வு மற்றும் முதலீடு ஆகியவற்றால் ஆதரிக்கப்படுகிறது.

34. ஒடிசாவின் புதிய முதலமைச்சர் யார்?

**விடை** : நவீன் பட்நாயக்

**விளக்கம்**

- ஒடிசாவின் புதிய முதலமைச்சராக பிஜி ஜனதா-வின் தலைவரான நவீன் பட்நாயக் பதவி ஏற்றுள்ளார்.
    - இவர் ஒடிசாவின் 27வது அமைச்சரவையின் தலைவராவார்.

35. உலகின் 5-வது மிக உயரமான மலை எது?

**விடை** : மக்கலு மலை (Mount Makalu)

**விளக்கம்**

- மக்கலு மலையை முதன் முதலாக ஒரு இந்திய பெண்ணான பிரியங்கா மொஹிட்டி ஏறி சாதனை புரிந்துள்ளார்.

- இது உலகின் 5-வது மிக உயரமான மலை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அதன் உயரம் 8,481 மீட்டராகும்.

36. NSIL- இன் குறிக்கோள் என்ன?

**விடை** : இந்திய விண்வெளி திட்டங்களில் தொழில்துறையின் பங்கை உயர்த்துவது.

**விளக்கம்**

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் (ISRO) தனது புதிய வணிக நிறுவனமான நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (New space India Limited – NSIL) – ஐ பெங்களூரில் தொடங்கயுள்ளது.
  - இந்திய விண்வெளி திட்டங்களில் தொழில் துறையின் பங்குகளை உயர்த்துவதே இதன் குறிக்கோளாகும்.

37. முதல் வகை 10% உயிரி எரிபொருளை கொண்ட கலவையைக் கொண்டு இயங்கும் இந்திய விமான படையின் விமானம் எது?

**விடை**: "AN-32"

**விளக்கம்**

- இந்திய விமான படையின் "AN-32" விமானமானது வானில் பயணம் செய்ய முறையான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
  - இதில் பயன்படுத்தும் எரிபொருளானது, 10% சதவீதம் உள்நாட்டு உயிரி எரிபொருள் கலவையைக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
  - இந்த உள்நாட்டு உயிரி எரிபொருள் முதல் முதலில் 2013 ஆம் ஆண்டு CSIR-11P ஆல் தயாரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

38. மாநில அரசுகளுக்கு பிளாஸ்டிக்கை அகற்றுவதற்கான திட்ட வரையறையை அளிக்க கூறி ஏப்ரல் 30 வரை காலக்கெடு கொடுத்தது எந்த நிறுவனம்?

**விடை**: தேசிய பசுமை தீர்ப்பானயம்

**விளக்கம்**

- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் படி 25 மாநில அரசுகளானது பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதற்கான முறையான செயல் திட்டத்தை சமர்ப்பிக்காமல் உள்ளது என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

- இதற்கான காலக்கெடுவை தேசிய பசுமைத் தீர்ப்பானயம் ஏப்ரல் 30 என்று தீர்மானித்திருந்தது.
- இந்த காலக்கெடு முடிந்த நிலையில் அந்த 25 மாநிலங்களுக்கு சுற்றுச்சூழல் இழப்பீடு தொகையாக ரூ.1 கோடி அபராதம் அளிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

39. சிக்கிமின் முதலமைச்சர் யார்?

**விடை**: P.S. கோகலே

**விளக்கம்**

- P.S.கோகலே என்றழைக்கப்படக் கூடிய பிரேம் சிங் தமாங் சிக்கிமின் முதல்வராக பதவி ஏற்றுள்ளார்.
  - இவர் சிக்கிம் கிராந்திகரி மோர்ச்சா (SRM) என்னும் கட்சியின் தலைவர் என்பது குறிப்பிடதக்கது.

40. நுகர்வோர் நுண்ணறிவு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி இந்தியாவில் மிகவும் நம்பகமான விளையாட்டு வீரர் யார்?

**விடை**: விராத் கோலி

**விளக்கம்**

- நுகர்வோர் நுண்ணறிவு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி இந்தியாவின் மிகவும் நம்பகமான விளையாட்டு வீரராக விராத் கோலி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
  - இவரை தொடர்ந்து சச்சின் டெண்டுல்கர் உள்ளார் என்பது குறிப்பிடதக்கது.

41. இந்தியாவின் மிகவும் இளைய வயது நாடாளுமன்ற உறுப்பினர் யார்?

**விடை**: சந்திராணி முர்மு

**விளக்கம்**

- பழங்குடியினச் சமூகத்தைச் சேர்ந்த சந்திராணி முர்மு என்ற பெண்மணி மக்களவைத் தேர்தலில் ஒடிசாவின் கியோன்ஜ்ஹார் தொகுதியில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார்.

- இவர் 25 ஆண்டுகள் 11 மாதங்கள் மட்டுமே நிரம்பிய நாடாளுமன்றத்தின் மிக இளைய வயது உறுப்பினராக உருவெடுத்துள்ளார்
- இதற்கு முன்பு ஹரியானாவின் ஹிசார் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட துஷ்யந்த் சவுதலா என்பவர் மிக இளைய வயது நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கினார். இவர் தனது 26-வது வயதில் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

42. ஓர்ச்சா நகரம் எங்குள்ளது?

**விடை**: மத்திய பிரதேசம்

**விளக்கம்**

- மத்திய பிரதேசத்தில் இருக்கும் ஓர்ச்சா நகரம் UNESCO-வின் பாரம்பரிய இடங்களின் தற்காலிக பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது.
  - இது பந்திலா,(Bundeela) இராஜ வம்சத்தில் ஒரு கட்டடகலை பாணியால் உருவானதாகும்

43. NSSO வின் விரிவாக்கம் என்ன?

**விடை**: National Sample Survey Office

**விளக்கம்**

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் (MOSPI) கீழ் தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் (NSSO) மற்றும் மத்திய புள்ளியியல் அலுவலகம் (CSO) ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்று வெளியேறும் NDA அரசானது முன்மொழிந்துள்ளது.

44. இந்திய தேர்தல் ஆணையம் எந்த பிரிவின் கீழ் தங்களால் அறிவிக்கப்பட்ட முடிவை குடியரசு தலைவரிடம் சமர்பித்தது?

**விடை**: மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951-ன் பிரிவு 73 –ன் கீழ்

**விளக்கம்**

- மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951-ன் பிரிவு 73-ன் கீழ் தங்களால் வழங்கப்பட்ட அறிவிக்கையின் நகலை இந்தியத் தேர்தல் ஆணையம் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்தது

- பிரிவு 73 ஆனது மக்களவைக்கான பொதுத் தேர்தலின் முடிவுகள் மற்றும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் ஆகியவற்றை வெளியிடுதலைப் பற்றிக் கூறுகின்றது. இந்த அறிவிக்கைக்குப் பின்பு சபை அல்லது அவை அதிகாரப் பூர்வமாக அமைக்கப்படும்.

45. ஆந்திர பிரேதசத்தின் முதல்வர் யார்?

**விடை**: ஜெகன் மோகன் ரெட்டி

**விளக்கம்**

- ஆந்திரப் பிரதேச முதல்வராக ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜெகன்மோகன் ரெட்டி (46) வியாழக்கிழமை பதவியேற்கிறார்.
    - தெலுங்கானா பிரிவினைக்குப் பிறகு, ஆந்திரத்தின் 2-ஆவது முதல்வராக அவர் பொறுப்பேற்க இருக்கிறார்.

46. எந்த ஷரத்தின் கீழ் குடியரசுத் தலைவர் பிரதமரை நியமிப்பார்?

**விடை:** ஷரத்து 75 (1)

**விளக்கம்**

- நாட்டின் பிரதமராக நரேந்திர மோடி இரண்டாவது முறையாக பதவியேற்க இருக்கிறார்.
    - இந்திய அரசியலமைப்பின் ஷரத்து 75(1)ன் கீழ் தன்னிடம் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் இந்தியாவின் பிரதமராக மோடியை நியமிப்பார்.

47. இந்தியாவின் மிக பெரிய திரவ ஹைட்ரஜன் சேமிப்பு தொட்டி எங்குள்ளது?

**விடை:** ஆந்திர மாநிலம், சித்தூர்

**விளக்கம்**

- ஆந்திர மாநிலத்தின் சித்தூர் மாவட்டத்தில் ஸ்ரீ நகரில் வி. ஆர். வி ஆசிய பசிபிக் உற்பத்தி தொழிற்சாலையில் இந்தியாவின் மிகப்பெரிய திரவ ஹைட்ரஜன் சேமிப்பு தொட்டி இஸ்ரோ தலைவர் கே.சிவன் அவர்களால் தொடங்கப்பட்டுள்ளது.
    - இது மேக் இன் இந்தியா வின் கீழ் தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடதக்கது.

48. 2022 ம் ஆண்டு திட்டமிடப்பட்ட ககனயன் திட்டத்திற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் (ISRO) எதனுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?

**விடை**: இந்திய விமானப்படை (IAF)

**விளக்கம்**

- இந்திய விமானப்படை (IAF) இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் (ISRO) உடன் 2022 ம் ஆண்டு திட்டமிடப்பட்ட ககனயன் திட்டத்திற்காக பயிற்சிக்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது

49. அருணாச்சல பிரதேசத்தின் முதலமைச்சர் யார்?

**விடை**: பெமா காந்து

**விளக்கம்**

- பாரதீய ஜனதா கட்சியை (பிஜேபி) சேர்ந்த பெமா காந்து அருணாச்சல பிரதேசத்தின் புதிய முதலமைச்சராக பதவியேற்றார்
    - அவர் அருணாச்சல பிரதேசத்தின் 10 வது முதலமைச்சர் ஆவார்

## உலக நிகழ்வுகள்

1. Tianhai – II – 01 என்ற செயற்கை கோளை விண்ணில் செலுத்திய நாடு எது?

**விடை** சீனா

**விளக்கம்**

- சீனாவானது தாயூவான் செயற்கைகோள் ஏவுதளத்திலிருந்து தாயின்ஹுய் II -01 (Tianhai – II -01) என்ற இரண்டு செயற்கைகோள்களை ஏய்தியுள்ளனர்.
    - இந்த ஏவுதளத்தை பேஸ் - 25 என்றழைப்பர்.
    - இந்த செயற்கை கோள்களை சாங்ஜெங் - 4B என்ற ராக்கெட் மூலம் செலுத்தப்பட்டது என்பது குறிப்பிடதக்கது.

**2.** சர்வதேச பௌத்த மாநாடு எங்கு நடைபெற்றது?

**விடை** : லும்பினி நகர்

**விளக்கம்**

- ஏப்.29 அன்று சர்வதேச பௌத்த மாநாடு கௌதம புத்தரின் பிறந்த இடமான லும்பினி நகரில் நடைபெற்றது. இது 2562 வது பௌத்த ஜெயந்தி கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த மாநாட்டின் அடிப்படை நோக்கம் கௌதம புத்தரின் போதனைகளை பரப்புவதும், சர்வதேச சமூகங்களிடையே அறவழி, சகோதரத்துவம், ஒத்துழைப்பு, அன்பு மற்றும் அமைதி ஆகியவற்றின் செய்திகளை பரப்புவதுமாகும்.
    - 'லும்பினி நேபாளம்: பௌத்தரின் பிறப்பிடம் மற்றும் பௌத்தமதம் மற்றும் உலக சமாதானத்தின் நீரூற்று – Lumbini Nepal: The Birthplace Of Lord Buddha And The Fountain Of Buddhism And World Peace' என்ற கருப்பொருள்.

3. சமீபத்தில் இலங்கையில் தடைசெய்யப்பட்ட தொலைக்காட்சி சானல்(Channel) எது?

**விடை:** பீஸ் தொலைக்காட்சி

**விளக்கம்**

- இலங்கையில் நடந்த பயங்கரவாத நிகழ்வுகளை அடுத்து இலங்கை அரசானது பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் தீவிரவாத கருத்தியிலை பிரச்சாரம் செய்யும் நபர்களை தடுக்க உத்தரவிட்டுள்ளது.
    - அதன் விளைவாக முஸ்லீம் மதகுரு ஜாகிர் நாயிக்கின் தொலைக்காட்சி மற்றும் சாட்டிலைட் நெட்வொர்க்கான பீஸ் தொலைக்காட்சி (Peace TV) தடைசெய்யப்பட்டுள்ளது.
    - இந்தியாவில் இந்த தொலைக்காட்சி இதற்கு முன் தடைசெய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**4.** முதன் முதலாக சுற்றுச்சூழல் மாற்றத்திற்காக அவசர நிலையை பிரகடனப்படுத்தவுள்ள நாடு எது?

**விடை**: இங்கிலாந்து

**விளக்கம்**

- இங்கிலாந்து பாராளுமன்றத்தில் ஒரு முன்மாதிரி நடவடிக்கையாக சுற்றுசூழல் (ம) காலநிலைக்காக அவசர நிலைக்கான பிரகடனத்தை நிறைவேற்ற உள்ளது.
    - இது காலநிலை மாற்றத்தை கையாளுவதின் அவசரத்தை குறிப்பிடுகிறது.

5. Sovereign Internet என்னும் மசோதாவை தொடங்கிய நாடு எது?

**விடை**: ரஷ்யா

**விளக்கம்**

- மே 2, 2019 ஆம் நாள் ரஷ்ய ஜனாதிபதியான விளாடிமிர்புட்டின், சாவெரெய்ங் இணையதளம் (Sovereign Internet) என்னும் மசோதாவில் கையெழுத்திட்டார்.
    - இது அந்நாட்டின் இணையத்தை தனிமைப்படுத்தவும் அந்நாட்டு அதிகாரிகளால் கட்டுபடுத்தவும் வழிவகுக்கும்.

6. சமீபத்தில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையால் பயங்கரவாதி என்று அறிவிக்கப்பட்டவர் யார்?

**விடை**: மசூத் அஷார்

**விளக்கம்**

- ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை, பாகிஸ்தானை தளமாகக் கொண்ட ஜெய்ஷ் - இ- முகமதின் தலைவரான மசூத் அஷாரை உலகளாவிய பயங்கரவாதி என்று முடிவு செய்துள்ளனர்.
    - இந்த அறிவிப்பு இந்திய தூதர் மற்றும் ஐ.நா.வின் நிரந்தர பிரதிநிதி சையத் அக்பருதீன் ஆகியோரால் வெளியிடப்பட்டது.

7. ஜப்பானின் 126-வது பேரரசராக முடிசூடி கொண்டவர் யார்?

**விடை**: நருஹிடோ

**விளக்கம்**

- ஜப்பானின் 126 ஆவது பேரரசராக நருஹிடோ புதன்கிழமை முடிசூடிக்கொண்டார். ஜப்பான் பேரரசர் அகிஹிடோ முதுமை காரணமாக செவ்வாய்க்கிழமை அரியணை துறந்தார். அத்துடன் ஜப்பானின் ஹெய்சேய் சகாப்தமும் முடிவக்கு வந்தது. இதைத் தொடர்ந்து ஜப்பானின் புதிய சகாப்தமான ரெய்வா (அழகிய நல்லிணக்கம்) மே1 ஆம் தேதி தொடங்கியது.

8. செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஈரான் ஏற்றுமதி செய்வதற்கு தடை விதிப்பதாக அறிவித்த நாடு எது?

**விடை** : அமெரிக்கா

**விளக்கம்**

- செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஈரான் ஏற்றுமதி செய்வதற்கு தடை விதிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

**9.** மன்னர் வஜ்ராலங்கரண் எந்த வம்சத்தை சேர்ந்தவர்?

**விடை**: சக்ரி

**விளக்கம்**

- தாய்லாந்தின் 10-வது மன்னராக வஜ்ராலங்கரண் முடி சூட்டிக்கொண்டார்.
  - இவர் சக்ரி வம்சத்தின் 10-வது மன்னராக வஜ்ராலங்கரண் முடி சூடிக்கொள்கிறார்.

10. அமெரிக்காவின் ஹீஸ்டன் பல்கலைக் கழகத்தில் உள்ள கட்டடமொன்றுக்கு யாருடைய பெயர் வைக்கப்பட்டது?

**விடை**: துர்கா அகர்வால் (ம) சுசீலா அகர்வால்

**விளக்கம்**

- அமெரிக்காவின் ஹீஸ்டன் பல்கலை கழகத்திலுள்ள கட்டடமொன்றுக்கு, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த துர்கா அகர்வால் (ம) சுசீலா அகர்வால் பெயர் வைக்கப்பட்டுள்ளது.
- பல்கலை கழக பேராசிரியர்களான இருவரும் ஆய்வுப் பணிகளில் சிறந்த பங்களிப்பு வழங்கியதற்கு இந்த கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது.

11. IBSA ஷெர்பாஸ் கூட்டம் எங்கு நடைபெற்றது?

**விடை**: கோச்சின்

**விளக்கம்**

- இந்தியா, பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்கா (IBSA) ஷெர்பாஸ் கூட்டம் மே 3 முதல் மே 5, 2019 வரை கோச்சினில் நடைபெற்றது.
  - IBSA ஷெர்பாஸ் சந்திப்பிற்கு முன்னதாக, 9வது IBSA முத்தரப்பு மந்திரிசபை கூட்டம் அதே இடத்திலேயே நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**12.** G7 நாடுகள் எவை?

**விடை**: பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், (ம) அமெரிக்கா

**விளக்கம்**

- பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் சுற்றுசூழல் அமைச்சர்கள் பங்குபெறும் G7-இன் இரண்டு நாள் கூட்டம் பிரான்ஸின் மெட்ஸில் நடைபெற்றது.
    - இதில் காடுகழிப்பு, பிளாஸ்டிக் மாசுபாடு, பவள பாறை சிதைவு ஆகிய சுற்றுசூழல் பிரச்சனை பற்றிய முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

**13.** 2018 ஆம் ஆண்டில் இந்தியா (ம) அமெரிக்கா இடையிலான இரு தரப்பு வர்த்தக கூட்டம் எங்கு நடைபெற்றது?

**விடை:** புதுடெல்லி

**விளக்கம்**

- மே 6, 2019 அன்று இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான இருதரப்பு வர்த்தக கூட்டம் புதுடெல்லியில் நடைபெற்றது.
    - இது இந்தியாவின் வர்த்தக மற்றும் தொழில்துறை, மற்றும் சிவில் விமான போக்குவரத்து துறையின் அமைச்சரான சுரேஷ் பிரபு மற்றும் அமெரிக்காவின் வர்த்தக செயலாளரான வில்பர் ரோஸ் இடையில் நடைபெற்றது

**14.** "GRIHA" என்பதன் விரிவாக்கம்?

**விடை**: Green Rating for Integrated Habitat Assessment

**விளக்கம்**

- GRIHA சபையினால் "தற்போதுள்ள நாள் முறை பள்ளிகளுக்காக GRIHA" என்னும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது (GRIHA for Existing day schools).
    - இத்திட்டம் என்பது இந்தியாவில் இருக்கும் பள்ளிகளின் சுற்றுசூழல் செயல்திறனை மதிப்பீடு செய்வதற்கான முறையாகும்.
    - GRIHA என்பது TERI (The Energy and Resource Institute) –ஆல் கொண்டுவரப்பட்டது.
    - GRIHA – Green Rating for Integrated Habitat Assessment.

**15.** ஆர்டிக் கவுன்சிலின் உறுப்பினர்கள் யார்?

**விடை**: அமெரிக்கா, கனடா, டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நார்வே, ரஷ்யா மற்றும் சுவீடன்

**விளக்கம்**

- மே 7, 2019 இல் பின்லாந்து, ரோவனிமி, லப்பி ஆரேனாவில் 11 வது ஆர்ட்டிக் கவுன்சில் கூட்டம் நடைபெற்றது.
    - ஆர்டிக் பிராந்தியத்தில் நிலையான வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகரிக்க 2 ஆண்டு ∴பின்னிஷ் தலைமையின் கீழ் முடிக்கப்பட்ட வேலைகளை 8 ஆர்க்டிக் மாகாணங்களில் இருந்து வந்தவர்கள் ஏற்றுக்கொண்டனர்.
    - ஆர்டிக் கவுன்சிலின் உறுப்பினர்கள்: அமெரிக்கா, கனடா, டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே, ரஷ்யா மற்றும் சுவிடன்.

16. உலகின் முதல் பூஜ்ய கழிவுகளை கொண்ட வர்த்தக விமானம் எது?

**விடை** : QF739

**விளக்கம்**

- ஆஸ்திரேலியாவில் க்வாண்டாஸால் இயக்கப்பட்ட வர்த்தக விமானமான QF739 விமானம் உலகில் முதல் பூஜ்ய கழிவுகளை கொண்ட விமானமாக ஆனது.
    - இது சிட்னியிலிருந்து அடிலெய்டு வரை செல்வது என்பது குறிப்பிடத்தக்கது.
    - இதில் கழிவுகள் உரமாக மறு பயன்பாடு மூலம் அல்லது மறுசுழற்சி மூலம் அகற்றப்படும்.

17. சமீபத்தில் போலியான செய்திகளை பரப்புவதை தடுக்க சட்டம் இயற்றிய நாடு எது?

**விடை** : சிங்கப்பூர்

**விளக்கம்**

- சிங்கப்பூரின் நாடாளுமன்றத்தில் போலி செய்திகளை கட்டுப்படுத்த ஒரு புதிய சட்டமானது பிறப்பிக்கப்பட்டுள்ளது.
    - இதன் மூலம் தவறான செய்தி பரப்புவோருக்கு 10 ஆண்டுகள் சிறை மற்றும் ஒரு மில்லியன் டாலர் வரை அபராதம் விதிக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

18. காலநிலை அவசர நிலையை இரண்டாவதாக அறிவித்த நாடு எது?

**விடை** : அயர்லாந்து

**விளக்கம்**

- அயர்லாந்து நாடானது காலநிலை அவசர நிலையை பிரகடனப்படுத்தியுள்ளது.
    - பிரிட்டனை அடுத்து காலநிலை அவசர நிலையை அறிவித்த இரண்டாம் நாடு இது என்பது குறிப்பிடத்தக்கது.

19. தென் ஆப்பிரிக்காவின் புதிய அதிபர் யார்?

**விடை**: சிரில் ராமாபோஸா

**விளக்கம்**

- தென் ஆப்பிரிக்காவில் ஆட்சியை தக்கவைத்தது தேசிய காங்கிரஸ்.
    - சிரில் ராமாபோஸா மீண்டும் அதிபராக பதவியேற்க உள்ளார்.
    - தென்னாப்பிரிக்க தேர்தலில் விகிதாசாரா பிரதிநிதித்துவ அடிப்படையில் தேர்தல் நடத்தப்படுகிறது.

20. Air help வெளியிட்ட சிறந்த விமான நிலையம் எது?

**விடை** : கத்தாரிலுள்ள ஹமாத் சர்வதேச விமான நிலையம்

**விளக்கம்**

- உலகளாவிய விமான பயணிகளின் உரிமைகள் வல்லுநரான ஏர்ஹேல்ப் (Air help), உலகின் சிறந்த விமான நிலையங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளனர்.
    - இதில் ஹைதராபாத்திலுள்ள ராஜீவ் காந்தி சர்வதேச விமான நிலையம் உலகின் எட்டாவது சிறந்த விமான நிலையமாக தேர்தெடுக்கப்பட்டுள்ளது.
    - இதில் முதலிடத்தில் கத்தாரின் ஹமாத் சர்வதேச விமான நிலையம் உள்ளது.

21. ஐக்கிய நாடுகளின் பொது சபைக்கான புதிய தலைவராக தேர்ந்தெடுக்கபட்டவர் யார்?

**விடை** : டிஜானி முகமது பேண்டி

**விளக்கம்**

- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக்கான (UNGA) புதிய தலைவராக பேராசிரியர் டிஜானி முகமது பேண்டி நியமிக்கப்பட்டுள்ளார்.

- அபுஜாவின் ஒரு பத்திரிக்கையாளர் மாநாட்டில், UNGA இன் வெளியேறும் தலைவரான மரியா ∴பெர்னாண்டா எஸ்பினோசா கார்சஸ், அவரது நியமனம் பற்றி அறிவித்தார்.
- 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் பதவி வகித்த திரு ஜோசப் நான்வென் கர்பாவுக்குப் பிறகு, UNGA இன் ஒரு தலைவராக நியமிக்கப்பட்ட இரண்டாவது நைஜீரியர் இவராவார்.

22. டீசலினால் செயல்படும் ரயில் பெட்டிகளுக்கான ஒப்பந்தத்தில் இந்தியா மற்றும் எந்த நாட்டிற்கு இடையில் கையெழுத்தானது?

**விடை** : நேபாளம்

**விளக்கம்**

- இந்தியா (ம) நேபாளம் இடையில் டீசலினால் செயல்படும் ரயிலை வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
  - இந்தியாவின் கொங்கன் ரயில்வே கார்ப்பரேஷன் லிமிடெட் மற்றும் நேபாளின் ரயில்வே துறைக்கு இடையில் இரண்டு 1600 HP டீசல் எலக்ட்ரிக் மல்டிபிள் பிரிவுடைய (DEMC – Diesel Electric Multiple Units) இரயில் பெட்டிகளுக்காக ஒப்பந்தம் கையெழுத்தானது.

23. உலக வர்த்தக அமைப்பின் வளரும் நாடுகளுக்கான அமைச்சரவை கூட்டம் எங்கு நடைபெற்றது?

**விடை**: டெல்லி

**விளக்கம்**

- உலக வர்த்தக அமைப்பினால் நடத்தப்பட்டு வரும் வளரும் நாடுகளின் அமைச்சரவை கூட்டம் டெல்லியில் நடைபெற்றது.
  - இது பல்வேறு விவகாரங்களை பற்றி விவாதிக்கவும் தீர்வு காணவும் நடத்தப்படுகிறது.
  - சீனா, தென்னாப்பிரிக்கா, பிரேசில், சவுதிஅரேபியா, துருக்கி, கஜகஸ்தான் மற்றும் வங்களாதேசம் ஆகிய நாடுகள் உட்பட 16 வளரும் நாடுகளும் 6 குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளும் (LDC) பங்குபெறுகின்றன.

24. 2019 – ஆம் ஆண்டு கேன்ஸ் (cannes) சர்வதேச திரைப்பட விழா எங்கு நடைபெற்றது?

**விடை**: பிரான்ஸ்

**விளக்கம்**

- சினிமா உலகின் மிகவும் மதிப்புமிக்க சர்வதேச நிகழ்வுகளில் ஒன்றான, கேன்ஸ் திரைப்பட விழா பிரான்சில் தொடங்கியுள்ளது.
    - கேன்ஸ் 2019 க்கு, மெக்சிகன் திரைப்பட தயாரிப்பாளர் அலெஜண்ட்ரோ கோன்சலஸ் இன்ராரிட்டு மதிப்பிட்டு குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இந்த கேன்ஸ் சர்வதேச திரைப்பட விழா 1946 -ஆம் ஆண்டு நிறுவப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

25. 400 கி.மீ வேகத்தில் செல்லும் ALFA – X என்னும் இரயில் எந்த நாட்டினால் செயல்படுத்தப்படுகிறது?

**விடை** : ஜப்பான்

**விளக்கம்**

- பயணத்தின் புரட்சிகர பயன்முறையை வளர்த்து வருகின்ற நிலையில், ஜப்பானில் மணி நேரத்திற்கு 400 கி.மீ. வேகத்தில் செல்லும் திறன் கொண்ட அதிவேக புல்லட் ரயிலை ஜப்பான் சோதனை செய்துள்ளது.
    - 2030 ஆம்ஆண்டுக்குள் ALFA-X என்று பெயரிடப்பட்ட இந்த ரயில் செயல்பாட்டுக்கு வரும் என்பது குறிப்பிடதக்கது.

26. ஈரான் வெளியுறவு அமைச்சர் யார்?

**விடை** : ஜாவத் ஷரீப்

**விளக்கம்**

- ஈரான் வெளியுறவு அமைச்சர் ஜாவத் ஷரீப் இருநாள் பயணமாக இந்தியா வந்துள்ளார்.
    - இந்திய வெளியுறவு துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜை சந்தித்து இரு நாட்டு உறவு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளார்.

27. இந்தியா GFDRR - ன் ஆலோசனை குழுவின் துணை தலைவராக எந்த நிதி ஆண்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்?

**விடை**: 2020

**விளக்கம்**

- இந்தியா உலகளாவிய பேரழிவு குறைப்பு மற்றும் மீட்பு பணியில் துணைபுரியும் அமைப்பான GFDRR 2020ஆம் நிதியாண்டிற்கு ஒரு மனதாக ஆலோசணை (CG) குழுவின் துணை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
    - CG -இன் மற்ற துணை தலைவர்கள் ஆப்பிரிக்க கரேபியன் மற்றும் பசிபிக் (ACP) மாநிலங்களின் குழு, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் உலக வங்கி

28. முப்படையையும் உள்ளடக்கிய சிறப்பு நடவடிக்கை பிரிவின் தலைவர் யார்?

**விடை**: ஏ.கே.தீங்ரா

**விளக்கம்**

- ஏஸ் சிறப்பு படைத் தளபதி மற்றும் ஶ்ரீலங்கா போர் வீரரான மேஜர் ஜெனரல் ஏ.கே.தீங்ரா இந்தியாவின் மூன்று படைகளையும் உள்ளடக்கிய ஒரு சிறப்பு நடவடிக்கை பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்ட முதல் நபராவார்.
    - இதில் மூப்படையின் தளபதிகளும் உள்ளனர் என்பது குறிப்பிடதக்கது.

29. சமீபத்தில் அல்-கொய்தாவுடன் தொடர்புள்ளதாக ஐ.நாவால் குற்றம் சாட்டப்பட்டு தடை செய்யப்பட்ட அமைப்பு எது?

**விடை**: ISIS –கோரசான் (ISIS – Khorasan)

**விளக்கம்**

- ISIS – கோரசானுக்கு அல் கொய்தாவுடன் தொடர்புள்ளதாகவும் மற்றும் ஆப்கானிஸ்தான் (ம) பாகிஸ்தானில் நடந்த தாக்குதலில் பங்குள்ளதாகவும் ஐ.நா சபை அறிவித்துள்ளது.
    - இதனால் அந்த அமைப்பின் சொத்துகளை முடக்கியுள்ளனர். மேலும் அதனை சார்ந்தவர்கள் மீது பயணத்தடையும் ஆயுத தடையும் போடப்பட்டுள்ளது.

30. “SIMBEX” இன் விரிவாக்கம் என்ன?

**விடை**: Singapore India Maritime Bilateral Exercise

**விளக்கம்**

- சமீபத்தில் நடந்து முடிந்த IMDEX-19 கடற்படை பயிற்சியை தொடர்ந்து, SIMBEX -19 என்னும் கடற்படை பயிற்சி இரண்டு கட்டமாக மே 16 தொடங்கி நடைபெறுகிறது.
    - SIMBEX என்னும் பயிற்சி ஆண்டு தோறும் இந்தியா மற்றும் சிங்கப்பூர் இடையில் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.
    - 2019 ஆண்டில் INS – சக்தி மற்றும் INS கொல்கத்தா இதில் பங்கேற்க உள்ளது.

31. ஸ்வீடனிலிருந்து போராட்டம் ஒன்றிற்கு அழைப்பு விடுத்த பள்ளி மாணவி யார்?

**விடை**: கிரேட்டா தன்பெர்க்

**விளக்கம்**

- ஸ்வீடனைச் சேர்ந்த பள்ளி மாணவி கிரேட்டா தன்பெர்க் (16). இவர் சமீபத்தில் இந்திய பிரதமர் நரேந்திரமோடிக்கு அனுப்பிய செய்தி வீடியோவாக வைரலாகியது. வருகிற மே-24ம் தேதி உலகளாவிய ஸ்ட்ரைக் ஒன்றில் ஈடுபட அவர் அழைப்புவிடுத்துள்ளார்.
    - நமக்கு இருப்பது ஒரு உலகம் தான் அதை பாதுகாக்க வாருங்கள் என இந்த பிரசாரம் முன்னெடுக்கப்படுகிறது. இந்த விஷயம் சர்வதேச அளவில் கவனத்தை பெற்று வருகிறது

32. குழந்தைகளின் உரிமைகளுக்கான அட்டவணையில் (Kids Right Index) முதலிடத்தில் உள்ள நாடு எது?

**விடை**: ஐஸ்லாந்து

**விளக்கம்**

- சமீபத்தில் வருடாந்திர உலகளாவிய அட்டவணையினால் வெளியிடப்பட்ட "குழந்தைகளின் உரிமைகளுக்கான அட்டவணையில்" இந்தியா 117 வது இடத்திலுள்ளது
    - இதில் ஐஸ்லாந்து முதலிடத்திலும் போலாந்து இரண்டாம் இடத்திலுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

33. மேற்கு பசிபிக்கில் அமெரிக்காவால் நடத்தப்பட்ட கடற்படை பயிற்சியில் எந்தெந்த நாடுகள் பங்கேற்றனர்?

**விடை** : ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் தென்கொரியா

**விளக்கம்**

- அமெரிக்க கடற்படையினால் மேற்கு பசிபிக்கில் நடத்தப்பட்ட கூட்டு போர் பயிற்சியில் ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் பங்கேற்றனர்.
    - அதன் பெயர் பசிபிக் வான்கார்ட் ஆகும்.

34. சமீபத்தில் மலேரியா இல்லா நாடுகளாக அறிவிக்கப்பட்டவை எவை?

**விடை** : அல்ஜீரியா மற்றும் அர்ஜென்டினா

**விளக்கம்**

- உலக சுகாதார அமைப்பு (WHO), அல்ஜீரியா மற்றும் அர்ஜென்டினாவை மலேரியா இல்லா நாடுகளாக அறிவித்துள்ளது.
    - இது 2010 மற்றும் 2013 ஆண்டுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளினால் முடிவு செய்யப்பட்டது.

35. மானடெரியல் நெறிமுறையால் தடைசெய்யப்பட்ட CFC-11ஐ பயன்படுத்திய நாடு எது?

**விடை** : சீனா

**விளக்கம்**

- இயற்கை பத்திரிக்கையால் நடத்தப்பட்ட ஆய்வின் படி, சீனா தொடர்ந்து ஓசோனை அழிக்கும் பொருளான CFC-11 ஐ பயன்படுத்தி வருவது தெரியவந்துள்ளது.
    - இது 2010ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட மானடெரியல் நெறிமுறை (Montreal Protocol)-க்கு எதிர்ப்பானதாகும்.

36. சமீபத்தில் ஐக்கிய நாடுகளின் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) வெளியிட்டுள்ள அறிக்கையின் பெயர் என்ன?

**விடை** : “பெண்களின் வர்த்தகம் மற்றும் மேலாண்மை : மாற்றத்திற்கான வணிக நிலை”

**விளக்கம்**

- சமீபத்தில் ஐக்கிய நாடுகளின் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) வெளியிட்டுள்ள அறிக்கையின் படி பாலின பன்முகதன்மையை மேம்படுத்தும் நிறுவனங்களில் இலாபம் அதிகரிக்கிறது மற்றும் அது உயர்ந்த தரத்தை அடைகிறது.
    - அந்த அறிக்கையின் பெயர் - "பெண்களின் வர்த்தகம் மற்றும் மேலாண்மை : மாற்றத்திற்கான வணிக நிலை"

37. இந்தியாவின் ரயில் பாதை மின்மயமாக்கும் திட்டத்திற்கு 750 மில்லியன் டாலர் வழங்கும் வங்கி எது?

**விடை** : ஆசிய வளர்ச்சி வங்கி

**விளக்கம்**

- ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) இந்தியாவின் ரயில் பாதையை மின்மயமாக்கும் திட்டத்திற்கும் ஒப்பந்தம் செய்துள்ளது.
    - அதன் கீழ் ADB இந்திய இரயில்வே நிதி கூட்டுதாபனத்திற்கு (IRFC) அமெரிக்க டாலர் மதிப்பில் 750 மில்லியன் வழங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

38. ஜுன் 7 அன்று பதவி விலகவுள்ள பிரிட்டிஷ் பிரதம மந்திரி யார்?

**விடை** : தெரசா மே

**விளக்கம்**

- பிரிட்டிஷ் பிரதம மந்திரி தெரசா மே பதவியை ராஜினாமா செய்யவுள்ளார். அவர் ஜுன் 7 அன்று பதவி விலகுவார்.

39. "சாஹின் -II" ஏவுகணை எந்த நாட்டிற்கு சொந்தமானது?

**விடை:** பாகிஸ்தான்

**விளக்கம்**

- நிலத்திலிருந்து ஏவப்படக்கூடிய கண்டம் விட்டு கண்டம் பாயும் "சாஹுன்- II" என்ற ஏவுகணையை பாகிஸ்தான் வெற்றிகரமாக சோதனை செய்தது.
    - பாகிஸ்தான் மலைப்பகுதியில் வாழும் "சாஹீன்" வகை கழுகளின் நினைவாக இப்பெயர் தரப்பட்டுள்ளது.

- மீயொலி வேகத்தில் செயல்படும்.
- 1500 முதல் 2000 கி.மீ வரை உள்ள இலக்குகளைத் தாக்கும்.

40. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு எங்கு நடைபெற்றது?

**விடை**: பிஷ்கெக் (கிர்கிஸ்தான்)

**விளக்கம்**

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வெளியுறவுத் துறை அமைச்சர்களின் சந்திப்பு பிஷ்கெக்கில் நடைபெற்றது.
  - இந்தியா சார்பாக வெளியுறவு துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் கலந்து கொண்டார்.
  - இந்தியா, முழுநேர உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு நடைபெறும் இரண்டாவது சந்திப்பு ஆகும்.

41. கிர்கிஸ்தானின் தலைநகர் என்ன?

**விடை** : பிஷ்கெக்

**விளக்கம்**

- இரண்டாவது ஷாங்கய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) வெகுஜன ஊடக மன்றம் கிர்கிஸ்தானின் தலைநகரான பிஷ்கெக்கில் நடைபெற்றது.
  - இது மே 23 தொடங்கி 26 வரை நடைபெற்றது.

42. ‘‘Global Coin’’ என்னும் கிரிப்டோ நாணயத்தை (Crypto Currency) வெளியிடவுள்ள நிறுவனம் எது?

**விடை**: பேஸ்புக்

**விளக்கம்**

- 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பேஸ்புக் தனது சொந்த குறியீட்டு நாணயத்தை (Crypto currency) வெளியிட திட்டமிட்டுள்ளது.

  அதன் பெயர் ‘‘Global Coin’’ என்பதாகும்.

43. இந்தோனேசியாவின் புதிய அதிபராக அதிகாரப்பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

**விடை**: ஜோகோ விடோடோ

**விளக்கம்**

- இந்தோனேசிய அதிபர் தேர்தலில் ஜோகோ விடோடோ மீண்டும் வெற்றி பெற்று தனது பதவியை தக்கவைத்துள்ளார். விடோடோ மற்றும் துணை அதிபர் பதவிக்குப் போட்டியிட்ட மாருப் அமின் ஆகியோருக்கு 55.5% வாக்குகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பிரபோவோ சுபியாந்தோ, சாண்டியாகா யூனோவுக்கு 44% வாக்குகளும் கிடைத்தன.

44. ஐக்கிய நாடுகளின் மனித குடியிருப்பு மாநாடு நடைபெற்ற இடம் எது?

**விடை**: நைரோபி, கென்யா

**விளக்கம்**

- 2019 ஆம் ஆண்டு மே 27 அன்று கென்யாவின் நைரோபியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு மாநாட்டுத் திட்டத்தின் (UN –Habitat Assembly) முதலாவதான ஒரு முழு அமர்வுச் சந்திப்பின் போது, அந்த அமைப்பின் நிர்வாக வாரியத்திற்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
    - ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு மாநாட்டுத் திட்டத்தின் ஒரு சிறப்புக் கருத்தானது "நகரங்கள் மற்றும் சமுதாயங்களில் சிறந்த வாழ்க்கைத் தரத்திற்கான புத்தாக்கம்" என்பதாகும்.
    - இந்த அமைப்பானது நைரோபியைத் தலைமையிடமாகக் கொண்டு 1978 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

45. உலகப் போட்டித்திறன் தரவரிசை 2019 ல் இந்தியா எந்த இடத்தில் உள்ளது?

**விடை:** 43 வது

**விளக்கம்**

- உலகப் போட்டித்திறன் தரவரிசை 2019 ல், இந்தியா 43 வது இடத்தைப் பிடித்தது. இது சர்வதேச அபிவிருத்தி முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனம் (International Institute for Management Development) தொகுத்தது. இதில் சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது என்பது குறிப்பிடதக்கது.

46. 'Hawa Aane De' என்ற பெயரில் ஒரு பாடல் ஒன்றை அறிமுகப்படுத்தியது யார்?

**விடை:** சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

**விளக்கம்**

- காற்று மாசுபாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்
    - (MoEFCC) 'ஹவா ஆனை டி' 'Hawa Aane De' என்ற பெயரில் ஒரு பாடல் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளனர்.
    - ஒவ்வொரு ஆண்டும் ஜீன் 5 உலக சுற்றுச்சூழல் தினம் (WED) கொண்டாடப்படுகிறது என்பது குறிப்பிடதக்கது

## விருதுகள்

1. 2019-ஆம் ஆண்டின் கோல்ட்மேன் சுற்றுச்சூழல் பரிசை பெற்ற அமெரிக்கர் யார்?

**விடை** : லின்டா கிரேசியா

**விளக்கம்**

- கோல்ட்மேன் சுற்றுசூழல் அறக்கட்டளையின் உலகில் சிறந்த அடிமட்ட சுற்றுசூழல் ஆர்வலர்களுக்கான விருதை 2019-ஆம் ஆண்டிற்கான 6 நபர்கள் பெற்றுள்ளனர்.
    - இதனை கோல்ட்மேன் சுற்றுசூழல் பரிசு என்பர்.
    - பரிசு பெற்றவர் - நாடு
    - பியார்ா ஜர்கல் - மங்கோலியா
    - ஆல்.ஃப்ரெட் பிரவுனெல் - லிபேரியா
    - அனாகொலோவிக் லெசோஸ்கி - வடக்கு மாசிடோனியா
    - அல்பர்டோ கர்மில் - சிலி
    - ஜாக்குலின் எவன்ஸ் - குக் தீவுகள்
    - லின்டா கிரேசியா - அமெரிக்கா

2. செவாலியர் விருது பிரான்ஸ் அரசால் யாருக்கு வழங்கப்பட்டது?

**விடை**: இஸ்ரோ முன்னாள் தலைவர் ஏ.எஸ். கிரண் குமார்

**விளக்கம்**

- இஸ்ரோ முன்னாள் தலைவர் ஏ.எஸ் கிரண் குமாருக்கு பிரான்ஸ் அரசு, அந்நாட்டின் உயரிய விருதான செவாலியர் விருதை வழங்கி கௌரவித்துள்ளது.

- விண்வெளித் துறையில் இந்தியா-பிரான்ஸ் இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்தியதில் சிறப்பாக பங்காற்றியதற்காக இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது.
- இஸ்ரோ என்றழைக்கப்படும் இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் பணியாற்றிய கிரண் குமார், கடந்த 2015-ஆம் ஆண்டு முதல் 2018 வரை, இஸ்ரோவின் தலைவராகப் பதவி வகித்தார்

3. பெண்களுக்காக கால்பந்து போட்டியில் இரு சிறப்பு விருதுகளை அறிவித்துள்ள அமைப்பு எது?

**விடை**: **FIFA**

**விளக்கம்**

- உலகெங்கிலும் பெண்களுக்கான கால்பந்தை ஊக்குவிப்பதற்காக FIFA அமைப்பால் புதியதாக இரு விருதுகளை அறிவித்துள்ளனர்.
    - அவை ஆண்டின் சிறந்த மகளிர் கோல்கீப்பர் மற்றும் ஆண்டின் சிறந்த மகளிர் கால்பந்து அணி என்பதாகும்
    - FIFA – Federation International Football Association

4. 2019 ஆம் ஆண்டு அமெரிக்காவின் சுதந்திரத்திற்கான ஜனாதிபதி பதக்கத்தினை பெற்றவர் யார்?

**விடை**: டைகர் உட்ஸ்

**விளக்கம்**

- அமெரிக்க ஜனாதிபதியான டோனால்ட் ∴ட்ரம்ப், அந்நாட்டின் மிக உயரிய விருதான, சுதந்திரத்திற்கான ஜனாதிபதி பதக்கத்தினை (Presidential medal of freedom) அந்நாட்டின் நட்சத்திர கோல்∴ப் வீரரான டைகர் உட்ஸ்க்கு வழங்கினார்.

5. 2019 ஆண்டின் CEAT இன் சிறந்த பந்துவீச்சாளர் யார்?

**விடை**: ஜாஸ்ரிட் பும்ரா

**விளக்கம்**

- CEAT இன் கிரிக்கெட் தரவரிசை விருதுகள் 2019 (CCR – 2019) என்னும் விருது வழங்கும் விழா மும்பையில் நடைபெற்றது.

- இதில் சர்வதேச கிரிக்கெட்டர் மற்றும் சிறந்த பேட்ஸ்மேன் விருதை விராத்கோலி பெற்றார்.
- 2019 – ஆம் ஆண்டின் சர்வதேச சிறந்த பந்துவீச்சாளர் - ஜாஸ்ரிட் பும்ரா

6. 2019 ஆம் ஆண்டிற்கான புகழ்பெற்ற மேன் புக்கர் சர்வதேச பரிசு (Man Booker International Prize) பெற்றவர் யார்?

**விடை** : ஜோக்கா அல்ஹர்தி

**விளக்கம்**

- ஓமான் ஒரு எழுத்தாளர் ஜோக்கா அல்ஹர்தி, அவரது அரபு நாவலான "வானியல் உடல்கள்" "Celestial Bodies" என்ற புகழ்பெற்ற மேன் புக்கர் சர்வதேச பரிசு (Man Booker International Prize) பெற்றார்.
  - இவர், இங்கிலாந்தின் மொழிபெயர்ப்பாளரான மேரிலின் பூத் என்பவருடன் தனது பரிசுப் பணத்தைப் பகிரிந்து கொள்வார் என்பது குறிப்பிடத்தக்கது.

7. 2019 ஆம் ஆண்டு Nine dots பரிசை பெற்றவர் யார்?

**விடை**: அன்னி சாய்டி

**விளக்கம்**

- இந்திய எழுத்தாளரான அன்னி சாய்டி ஒன்பது புள்ளிகள் பரிசை (Nine dots prize) 2019 ஆம் ஆண்டுக்காக பெற்றுள்ளார்
  - அவர் தான் எழுதிய " பிரட், சிமெண்ட், கேக்டஸ்" என்னும் புத்தகத்திற்காக பெற்றுள்ளார்

## நியமனங்கள்

1. MCC-யின் பிரிட்டிஷர் அல்லாத முதல் தலைவர் யார்?

**விடை**: குமார் சங்கக்காரா

**விளக்கம்**

- இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் குமார் சங்கக்காரா, டேரி லெபோன் கிரிக்கெட் கிளப்பின் (MCC- Maxylebone Cricket Club) முதல் பிரிட்டிஷர் அல்லாத தலைவராக தேர்தெடுக்கப்பட்டுள்ளார்.
    - இவர் ஆண்டெனிவேர் ஃபேர்டை தொடர்ந்து இப்பதவிக்கு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.
    - மேலும் இவர் அக்டோபர் முதல் தலைவராக செயல்படுபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

2. 15-வது நிதிக் குழுவின் ஆலோசகராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை**: டாக்டர் கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியம்

**விளக்கம்**

- இந்தியாவின் தலைமை பொருளாதார ஆலோசகர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியம் 15-வது நிதிக்குழுவின் ஆலோசகராக நியமனம்.
    - ஆலோசகர் குழு 12 உறுப்பினர்களை கொண்டது.
    - ஆலோசனை குழு நிதி குழுவிற்கு திட்ட வரைவுகளை கொடுக்கும் அமைப்பாக செயல்படும்.

3. தேசிய சட்ட தீர்ப்பாய உறுப்பினராக யாரை நியமித்துள்ளனர்?

**விடை**: நீதிபதி எம்.வேணுகோபால்

**விளக்கம்**

- தேசிய சட்ட தீர்ப்பாய உறுப்பினராக நீதிபதி எம்.வேணுகோபால் நியமனம்

4. குஜராத்தின் தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டவர் யார்?

**விடை**: முனைவர் எஸ். சாந்தகுமார்

**விளக்கம்**

- குஜராத்தின் தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் (ஜிஎன்எல்யூ) புதிய இயக்குநராக முனைவர் எஸ்.சாந்தகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வரும் ஜூலை முதல் பதவி ஏற்க உள்ளார்.

5. “ஹிமாதிரி ஆராய்ச்சி நிலையம்” எங்குள்ளது?

**விடை** : நார்வே

**விளக்கம்**

- சர்வதேச மன்றமான ஆர்டிக் கவுன்சிலில் பார்வையாளராக இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
    - கனடா, டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நார்வே, ரஷ்யா, ஸ்வீடன் மற்றும் அமெரிக்கா ஆகியவை ஆர்டிக் கவுன்சிலின் உறுப்பினராவார்.
    - புவியியல் அமைச்சகத்திற்கு கீழ் அமைந்துள்ள இந்தியாவின் துருவம் மற்றும் பெருங்கடல் ஆய்வுகளுக்கான தேசிய மையமான “ஹிமாதிரி” – (Himadri) நிலையம்” நார்வேயின் ஸ்வால்பார்டில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

6. ஐ.நா. பொருளாதார மற்றும் சமுதாயக் குழுவின் சர்வதேச போதை மருந்து தடுப்பு வாரியத்தின் தலைவர் யார்?

**விடை** : ஜக்ஜூத் பவாடியா (Jagjit Pavadia)

**விளக்கம்**

- ஐ.நா பொருளாதார மற்றும் சமுதாயக் குழுவின் ஐந்தாண்டு கால சர்வதேச போதை மருந்து தடுப்பு வாரியத்தின் தலைவராக (International Narcotics Control Board (INCB)) அதிக வாக்குகளைப் பெற்று இந்தியாவின் ஜக்ஜூத் பவாடியா (Jagjit Pavadia) மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

7. ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் இந்தியாவின் நல்லெண்ண தூதர் யார்?

**விடை**: தியா மிஸ்ரா.

**விளக்கம்**

- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) இந்தியாவின் நல்லெண்ண தூதராக இருந்த நடிகை தியா மிஸ்ரோ தற்போது நிலையான வளர்ச்சி இலக்குகள் குழுவின் 17 உறுப்பினர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
    - நிலையான வளர்ச்சி இலக்குகள் குழு வறுமை ஒழிப்பு, காலநிலை மாற்றம், உலக அமைதி என 17 இலக்குகளை கொண்டு செயல்படுகிறது.

8. மகாராஷ்ராவின் புதிய தலைமை செயலாளர் யார்?

**விடை**: அஜாய் மேத்தா

**விளக்கம்**

- மகாராஷ்டிராவின் புதிய தலைமை செயலாளராக மும்பை நகராட்சி ஆணையர் அஜாய் மேத்தா நியமிக்கப்பட்டுள்ளார்.
    - மகாராஷ்டிரா முதலமைச்சர் தேவேந்திர பத்னாவிஸ் சிறப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள யுபிஎஸ் மதன் அஜாய் மேத்தா வெற்றி பெற்றார்.

9. இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதராக யார் நியமிக்கப்பட்டுள்ளார்?

**விடை**: மொயின் உல்-ஹக்

**விளக்கம்**

- இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதராக மொயின் உல்-ஹக் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியாவில் அமைய உள்ள புதிய அரசுடன் அனுமதி பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கும் என பாகிஸ்தான் நம்பிக்கை தெரிவித்துள்ளது.
    - காஷ்மீரில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனால் இரு நாடுகளுக்கிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. அமைதி பேச்சுவார்த்தையும் தடைபட்டுள்ளது.

10. பிஜி உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள இந்திய நீதிபதி யார்?

**விடை** : மதன் பி.லோக்கூர்

**விளக்கம்**

- இந்திய உச்சநீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியான மதன் பி.லோக்கூர், பிஜி உச்சநீதிமன்றத்தின் வெளிநாடு வாழ் குழுவின் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
    - பிஜி உச்சநீதிமன்றமானது ஓராண்டுக்கு மூன்று அமர்வுகளைக் கொண்டிருக்கும். ஆகஸ்ட் 15 முதல் 30 வரை நடைபெறும் அமர்வில், நீதிபதி லோக்கூர் கலந்து கொள்வார்.

11. அஸ்ஸாம் ரைபிலின் 3- வது படைபிரிவு எந்த கடலோர காவற்படை கப்பலுடன் இணைப்பு பட்டயம் ஒப்பந்தம் போட்டுள்ளது?

**விடை**: “சவுரியா” கப்பல்

**விளக்கம்**

- அஸ்ஸாம் ரைபில்ஸ் (ம) இந்தியக் கடலோரக் காவல் படை இடையே இணைப்பு பட்டயம் ஒப்பந்தம் கையெழுத்தானது

- அஸ்ஸாம் ரைபிலின் 3- வது படைபிரிவு (நாக குன்றுகள்) மற்றும் கடலோர காவற்படை கப்பலான "சவுரியா" ஆகியவற்றிற்கிடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

1. அல்ட்ரா சென்சிட்டிவ் குவாண்டம் தெர்மோமீட்டரை உருவாக்கிய குழு எது?

**விடை**: ஜமியா மிலியா இஸ்லாமிய பல்கலைகழக ஆராய்ச்சியாளர்கள் குழு

**விளக்கம்**

- ஜமியா குழு அல்ட்ராசென்சிட்டிவ் குவாண்டம் தெர்மோமீட்டரை உருவாக்கியுள்ளார்.
    - புது டெல்லியில் உள்ள ஜமியா மிலியா இஸ்லாமியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் குழு கிராபீன் குவாண்டம் புள்ளிகளை பயன்படுத்தி அல்ட்ராசென்சிட்டிவ் குவாண்டம் தெர்மோமீட்டரை உருவாக்கியுள்ளனர். 27 டிகிரி C முதல் -196 டிகிரி C வரை இந்த தெர்மோமீட்டரால் துல்லியமாக அளவிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

2. 9 இந்திய மொழிகளுக்கு எளிதான OCR அமைப்பை உருவாக்கிய ஐ.ஐ.டி குழுவின் தலைவர் யார்?

**விடை**: ஸ்ரீனிவாச சக்கரவர்த்தி

**விளக்கம்**

- ஐஐடி மெட்ராஸ் குழு ஒன்பது இந்திய மொழிகளுக்கு எளிதான OCR அமைப்பை உருவாக்கியுள்ளது
    - சென்னை ஐ.ஐ.டி.யின் ஸ்ரீனிவாச சக்கரவர்த்தின் குழு ஒன்பது இந்திய மொழிகளுக்கு ஒரு ஒன்றுபட்ட ஸ்கிரிப்ட் ஒன்றை உருவாக்கியுள்ளது. அதற்கு பாரதி ஸ்கிரஜப்ட் என்று பெயரிடப்படுள்ளது. பல மொழி ஒளியியல் பாத்திர அங்கிகரிப்பு (OCR) திட்டத்தைப் பயன்படுத்தி ஆவணங்களை வாசிப்பதற்கான ஒரு முறையை இது உருவாக்கியுள்ளது.
    - இந்த குழு ஒரு விரல்-உச்சரிப்பு முறையை உருவாக்கியுள்ளது. இதைப் பயன்படுத்தி காது கேளாதோருக்கான ஒரு சைகை மொழியை உருவாக்க

இது உதவும். தேவநகரி, பெங்காலி, குர்முகி, குஜராத்தி, ஒரியா, தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

3. One Touch என்னும் அம்சத்தை தொடங்கிய நிறுவனம் எது?

**விடை** : Paypal இந்தியா

**விளக்கம்**

- PayPal இந்தியா Google Smart Lock ஐப் பயன்படுத்தி இந்தியாவில் அதன் OneTouch அம்சத்தை அறிமுகப்படுத்தியது
    - One Touch அம்சத்தின் துவக்கம் இந்திய நுகர்வோர் PayPal உடன் தங்கள் ஆண்ட்ராய்டு சாதனத்தை பதிவு செய்து பயன்படுத்த அனுமதிக்கின்றது. இதனால் மீண்டும் மீண்டும் உள் நுழைவுகளின் சிக்கலை நீக்கி, தடையற்ற பணம் செலுத்தும் அனுபவத்தை செயல்படுத்தகிறது.
    - பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட் (BHEL) மற்றும் இந்தியாவின் தானியங்கி ஆராய்ச்சி சங்கம் (ARAI) ஆகியவை இணைந்து மின்-மொபைலுடன் தொடர்புடைய பல்வேறு திட்டங்களில் பயனுள்ள ஒத்தழைப்பு மற்றும் மின்சார மற்றும் ட்ரோலி பஸ், மின்சார வாகன சார்ஜர்கள், பேட்டரி மற்றும் சார்ஜர் சோதனை முதலியவைகான பயனள்ள ஒத்துழைப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளன.

4. “Momo-3” ராக்கெட்டை ஏய்திய தனியார் நிறுவனம் எது?

**விடை**: இன்டெர்ஸ்டெல்லார் டெக்னாலஜி.

**விளக்கம்**

- ஜப்பானின் தனியார் அமைப்பான இன்டெர்ஸ்டெல்லர் (Interstellar) டெக்னாலஜி அதனுடைய முதலாம் ராக்கெட்டான “மோமோ-3” (Momo – 3) ஐ வெற்றிகரமாக விண்ணில் ஏய்தியுள்ளது.
    - ஆளில்லா ராக்கெட்டான “மோமோ-3” ஹொக்கைடோ ஏவுதளத்திலிருந்து ஏய்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

5. நாசாவினால் செலுத்தப்பட்டு டிடிமூன் குறுங்கோளை தாக்கவிருக்கும் விண்கலம் எது?

**விடை:** DART

**விளக்கம்**

- தேசிய விமானவியல் மற்றும் விண்வெளி நிறுவனம் (NASA) 2022 ஆம் ஆண்டு DART (Double Asteroid Redirection Test) என்னும் விண்கலத்தை கொண்டு டிடிமூன் அல்லது டிடிமோஸ்-பி (Didymoon or Didymos –B) என்றழைக்கப்படும் குறுங்கோளை தாக்கி அழிக்கவுள்ளது.
    - இது கிரக பாதுகாப்பு தொழில்நுட்பத்தை நிருபிக்கும் முதல் முயற்சியாகும்.
    - அந்த குறுங்கோள் 150 மீட்டர் உயரம் கொண்டதாகும்.

6. எல்லை பாதுகாப்புகாக இந்தியா அனுப்பவுள்ள செயற்கைகோளின் பெயர் என்ன?

**விடை**: ரிசாட்-2

**விளக்கம்**

- மும்பையில் கடந்த 2008-ம் ஆண்டு நவம்பர் 26-ம் தேதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவி திடீர் தாக்குதல் நடத்தினர். அதன்பின், இந்தியா ‘ரேடார் இமேஜிங் சேட்டிலைட்’ (ரிசாட்-2பிஆர்1) என்ற நவீன செயற்கைக் கோளை 2009-ம் ஆண்டு ஏப்ரல் 20-ம் தேதி விண்ணில் செலுத்தியது. இது இஸ்ரேல் நாட்டில் தயாரிக்கப்பட்டது. இந்தச் செயற்கைக் கோள் எல்லைப் பகுதிகளில் தீவிரவாதிகளின் நடமாட்டம் உட்பட பல்வேறு தகவல்களை பாதுகாப்புப் படையினருக்கு வழங்கி வருகிறது.
    - இந்நிலையில், அடுத்தகட்டமாக ‘ரிசாட்-2’ ரக செயற்கைக் கோள் அதிநவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்கைக்கோளை வரும் 22-ம் தேதி இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) விண்ணில் செலுத்த உள்ளது. இந்தச் செயற்கைக் கோள் பூமியில் இருந்து 536 கி.மீ உயரத்தில் நிலைநிறுத்தப்படும். ‘ரிசாட்-2’ செயற்கைக்க கோள் இந்திய எல்லைப் பகுதிகளை 24 மணி நேரமும் கண்காணிக்கும் மேக மூட்டங்கள், பனி போன்ற எந்த சீதோஷ்ண நிலையிலும் துல்லியமாக செயப்படும். குறிப்பாக பாகிஸ்தான்

ஆக்கிரமிப்பு காஷ்மீர் உட்பட இந்திய எல்லைப் பகுதிகளில் தீவிரவாதிகளின் நடமாட்டம், அசைவுகளை கண்காணித்து உடனுக்குடன் தகவல் அனுப்பும்.

- இந்தச் செயற்கைக் கோளை பேரிடர் மேலாண்மைக்கும் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

7. "SHiELD" என்றழைக்கப்படும் லேசர் அமைப்பை சோதனை செய்த நாடு எது?

**விடை** : அமெரிக்கா

**விளக்கம்**

- அறிவியல் விமானப்படை ஆராய்ச்சி ஆய்வகம், நியூ மெக்ஸிகோவில் அமெரிக்க இராணுவத்தின் வெள்ளை சாண்ட்ஸ் ஏவுகணை சோதனை பகுதியில் சுய-பாதுகாப்பு உயர் எரிசக்தி லேசர் செய்முறையாளர் (Self – Protect High Energy Laser Demonstrator (SHiELD)) என்று அழைக்கப்படும் லேசரை பரிசோதித்தனர்.
    - இது புவியிலிருந்து விண்ணில் இருக்கும் பொருளையும் விண்ணிலிருந்து விண்ணிலிருக்கும் பொருளையும் தாக்கக்கூடும் என்பது குறிப்பிடத்தக்கது.

8. பி.எஸ்.எல்.வி C–46 ராக்கெட்டில் விண்ணில் செலுத்தப்படும் செயற்கைக்கோள் என்ன?

**விடை**: ரிசாட் 2B.

**விளக்கம்**

- ரேடார் புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான ரிசாட் 2B-யை தாங்கியபடி பி.எஸ்.எல்.வி C–46 ராக்கெட் 22-ம் தேதி செலுத்தப்படுகிறது என இஸ்ரோ வெளியிட்டுள்ளது.
    - இஸ்ரோவால் வடிவமைக்கப்பட்ட ரிசாட் 2-B செயற்கைக்கோளானது பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டிற்காக விண்ணில் செலுத்தப்படுகிறது.
    - ரிசாட் 2B செயற்கைக்கோளில் அதிநவீன இமேஜிங் சாதனம் உள்ளது. இதன் மூலம் புவியின் கீழ்பரப்பில் உள்ளவற்றை தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

9. இந்தியாவில் ஏப்ரல் 2019 இல் ஏற்றுமதி வளர்ச்சி சதவீதம் என்ன?

**விடை**: 1.34%

**விளக்கம்**

- வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின் படி இந்தியாவில் ஏப்ரல் 2018 முதல் ஏப்ரல் 2019 வரையுள்ள ஒட்டுமொத்த ஏற்றுமதி விற்பனை மற்றும் சேவைகள் மூலம் 4 பில்லியன் டாலர் நேர்மறை வளர்ச்சியடைந்ததாக கூறியுள்ளனர்.
    - இதன் மூலம் ஏப்ரல் 2019 இல் இந்தியா 1.34% வளர்ச்சியடைந்துள்ளது

10. இந்தியாவின் ஆதித்யா-$L_1$ விண்கலம் எந்த ஆண்டு செயல்படுத்தப்படவுள்ளது?

**விடை**: 2021

**விளக்கம்**

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான "ISRO" சமீபத்தில் ஏழு முக்கிய திட்டங்களை அறிவித்துள்ளது.
    - அதிலடங்கும் முக்கிய திட்டங்கள்
    - சந்திராயன் -2 : இந்தியாவின் இரண்டாவது சந்திர ஆய்வு திட்டமாகும் - ஜீலை 19இல் செலுத்தப்பட உள்ளது
    - ஆதித்யா – $L_1$ (Aditya – $L_1$) : 2021 ஆண்டு அனுப்பவிருக்கும் சூரிய ஆய்வு திட்டம்
    - எக்ஸ்போசாட் (Xposat) : X ray Polarimeter Satellite 2020 ஆண்டு அனுப்பப்படும்

11. "He Art" என்னும் திட்டத்தை தொடங்கிய நிறுவனம் எது?

**விடை**: HDFC மூலதன ஆலோசகர்கள் நிறுவனம்

**விளக்கம்**

- HDFC லிமிடெட் நிறுவனத்தின் துணை நிறுவனமான HDFC மூலதன ஆலோசகர்கள் நிறுவனம் ஒரு புதிய முயற்சியாக "He ART" (HDFC Affordable Real Estate and Technology Program) என்னும் திட்டத்தை தொடங்கி உள்ளனர்
    - இது ரியல் எஸ்டேட் துறையில் உதவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது

12. சீதோஷ்ண நிலையை கண்காணிக்க விண்ணில் ஏவப்பட்ட ராக்கெட்டின் பெயர் என்ன?

**விடை**: பி.எஸ்.எல்.வி சி-46

**விளக்கம்**

- சீதோஷ்ண நிலையை கண்காணிக்க ரிசாட்-2பி ரேடார் செயற்கைக் கோளுடன் பி.எஸ்.எல்.வி சி-46 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.
    - நாட்டின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் ‘ரிசாட் 2’ செயற்கைக் கோளை அதி நவீன வசதிகளுடன் இஸ்ரோ தயாரித்திருந்தது. இந்த செயற்கைக் கோள் ஏற்கனவே அறிவித்தபடி இன்று அதிகாலை 5.27 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது.
    - ரிசாட் -2 செயற்கை கோள் இந்திய எல்லைப் பகுதிகளை 24 மணி நேரமும் கண்காணிக்கும்.

13. வருவாய் அடிப்படையில் முதலிடத்தை பிடித்துள்ள நிறுவனம் எது?

**விடை**: ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ்

**விளக்கம்**

- வருவாய் அடிப்படையில் பொதுத்துறை நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனை (ஐஓசி) பின்னுக்குத் தள்ளி முகேஷ் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் முதலிடத்தை பிடித்துள்ளது.

14. RISAT-2B செயற்கைக்கோளை எந்த விண்வெளிக்கலத்தை பயன்படுத்தி எய்தினர்?

**விடை**: PSLV-C46

**விளக்கம்**

- இந்தியா வெற்றிகரமாக ஒரு ரேடார் இமேஜிங் புவி கண்காணிப்பு செயற்கைக் கோளான RISAT-2B ஐ சுற்றுப்பாதையில் நிறுவப்பட்டது
    - RISAT-2B செயற்கைக் கோளை PSLV-C46 என்ற விண்வெளிக்கலத்தை பயன்படுத்தி ஏவப்பட்டது.

15. மத்தியப்பிரதேசத்தின் எந்த மாவட்டத்தில், வாக்கு எண்ணும் மொத்தப் பணியையும் பெண்களே கையாள உள்ளனர்?

**விடை**: ஹர்தா

**விளக்கம்**

- மத்தியப்பிரதேச மாநிலத்தின் ஹர்தா மாவட்டத்தில் வாக்கு எண்ணும் மொத்தப் பணியையும் பெண்களே கையாளவுள்ளனர். இதன் வகையில் இதுவே முதல் முயற்சியாகும். ஹர்தா மாவட்டம் பெதுல் நாடாளுமன்ற தொகுதியின் ஒரு பகுதியாகும். மேலும், டிமானி மற்றும் ஹர்தா சட்டமன்றத் தொகுதிகளின் வாக்கு எண்ணிக்கை ஹர்தா மாவட்டத்தின் தலைமையகத்தில் நடைபெறும்.

16. Goibibo உடன் இணைந்து பல்-நாணய பயண அட்டைகளை அறிமுகப்படுத்தியுள்ள வங்கி எது?

**விடை** : ஐசிஐசிஐ வங்கி

**விளக்கம்**

- ஐசிஐசிஐ வங்கியானது Goibibo உடன் இணைந்து பல்-நாணய பயண அட்டைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. வெளிநாடுகளுக்கு பயணம் செய்யும் எவரும், ICICI வங்கியின் சேமிப்புக் கணக்கை வைத்திருந்தாலும் இல்லையென்றாலும் கூட, Goibibo வலைத்தளத்திலோ அலைபேசி செயலியிலோ Goibibo ICICI வங்கியின் பயண அட்டைக்கு விண்ணப்பிக்கலாம். இந்த அட்டை ஆனது உலகளவில் 200 நாடுகளிலும், 4.6 கோடி வணிகர்களிடமும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

17. சமீபத்தில் "ஷாஹின் - II" என்ற ஏவுகணை எந்த நாட்டினால் சோதனை செய்யப்பட்டது?

**விடை** : பாகிஸ்தான்

**விளக்கம்**

- தரை வழி தாக்கும் ஏவுகணையான "ஷாஹின் - II" (Shaheen – II) ஏவுகணை வெற்றிகரமாக பாகிஸ்தானால் சோதனை செய்யப்பட்டுள்ளது.

18. சமீபத்தில் சீனா பாகிஸ்தானிற்கு அளித்த போர் விமானத்தின் பெயர் என்ன?

**விடை** : JF-17 தண்டர் போர் விமானம்

**விளக்கம்**

- சீனா அதன் முதல் ஆராயப்பட்ட பல செயல்பாடுகளை கொண்ட JF-17 தண்டர் போர் விமானத்தை பாகிஸ்தான் விமான படைக்கு அளித்துள்ளது.

19. இந்திய விண்வெளி துறையின் முதல் வணிக நிறுவனம் எது?

**விடை:** Antrix Corporation Limited

**விளக்கம்**

- இஸ்ரோ, நியூ ஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (New Space India Limited) என்ற புதிய வணிக நிறுவனத்தை பெங்களூருவில் தொடங்கியுள்ளது.
    - இந்திய விண்வெளி துறையின் இரண்டாவது வணிக நிறுவனமாகும்.
    - 1992- ம் ஆண்டு "Antrix Corporation Limited" என்ற வணிக நிறுவனத்தை விண்வெளி துறை தொடங்கியது.

**20.** வளிமண்டலத்தில் தற்போது அளவிடப்பட்டுள்ள கார்பன்-டை-ஆக்ஸைடின் அளவு என்ன?

**விடை:** 415 ppm

**விளக்கம்**

- வளிமண்டலத்தில் உள்ள கார்பன்-டை-ஆக்ஸைடின் அளவு, சர்வதேச அளவில் 415 ppm என்ற அளவை கடந்துள்ளது
    - ஹவாயில் உள்ள மவுனா லோ ஆய்வகத்தில் உள்ள உணரிகளால் அளவிடப்பட்டுள்ளது
    - கார்பன்-டை-ஆக்ஸைடு 100 முதல் 300 ஆண்டுகள் வரை வளிமண்டலத்தில் இருக்கும்.

21. நிலாவிற்கு மனிதர்களை அனுப்ப NASA கொண்டுள்ள திட்டத்தின் பெயர் என்ன?

**விடை** : ஆர்டிமிஸ்

**விளக்கம்**

- அமெரிக்காவின் தேசிய விமானவியல் மற்றும் விண்வெளி நிர்வகமான NASA, தனது "ஆர்டிமிஸ்" (Artemis) திட்டத்தை வெளியிட்டுள்ளது.
    - இத்திட்டமானது நிலாவிற்கு மனிதர்களை 2024 ஆண்டுக்குள் கொண்டு செல்லும் முயற்சியாகும்.
    - இதன் ஆளில்லா சோதனை முயற்சியான "ஆர்டிமிஸ் - I" 2020-க்குள் செயல்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

22. சமீபத்தில் ஆகாஷ் ஏவுகணை எங்கு சோதனை செய்யப்பட்டது?

**விடை**: ஒடிசா கடற்கரையில் பாலசோரில்

**விளக்கம்**

- DRDO வால் புதியதாக மேம்படுத்தப்பட்ட தரையிலிருந்து விண்ணில் தாக்க கூடிய ஆகாஷ் என்னும் ஏவுகணை ஒடிசா கடற்கரையில் பாலசோரில் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

## விளையாட்டு நிகழ்வுகள்

1. இந்திய குத்துச்சண்டை சம்மேளத்தின் தலைவர் யார்?

**விடை**: அஜய் சிங்

**விளக்கம்**

- ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில் இந்திய குத்துச்சண்டை லீக் (IBL) இந்திய குத்துச்சண்டை சம்மேளனம் துவக்கப்படும்.
  - புது டெல்லி நிகழ்ச்சியில் BFI (Boxing Federation of India) தலைவர் அஜய் சிங் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

2. ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியின் 23- வது பதிப்பில் முதலிடம் பெற்ற நாடு எது?

**விடை** : பஹ்ரைன்

**விளக்கம்**

- ஆசிய தடகள சாம்பியன்ஷிப்பின் 23- வது மதிப்புகத்தாரில் இருக்கும் தோகாவில் நடைபெற்றது.
  - 4 நாட்கள் நிகழ்வான இதில் 63 நாடுகள் பங்குபெற்றன.
  - இதில் 11 தங்கம், 7 வெள்ளி (ம) 4 வெண்கலம் பெற்று பஹ்ரைன் முதல் இடத்திலும் அதை தொடர்ந்து சீனாவும் உள்ளது.
  - இதில் இந்தியா 4- வது இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

3. ISSF -வின் தரவரிசையின்படி பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் முதலிடம் பிடித்தவர் யார்?

**விடை**: அபூர்வி சண்டேலா

**விளக்கம்**

- சர்வதேச துப்பாக்கி சுடும் போட்டியின் கூட்டமைப்பால் (ISSF) சமீபத்தில் வெளியிடப்பட்ட தரவரிசைகளின்படி, உலக கோப்பை போட்டியில் தங்கம் வென்ற வீராங்கனையான அபூர்வி சண்டேலா பெண்களுக்கான 10 மீட்டர் ஏர்ரைபிள் பிரிவில் 1926 புள்ளிகளுடன் முதலிடம் வகிக்கிறார்.
    - அவரை தொடர்ந்து இரண்டாமிடத்தில் அஞ்சம் மௌத்கில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

4. ஆசிய தனிநபர் ஸ்குவாஷ் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றவர் யார்?

**விடை** : ஜோஷ்னா சின்னப்பா

**விளக்கம்**

- ஆசிய தனிநபர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டி இறுதிச் சுற்றுக்கு ஜோஷ்னா சின்னப்பா தகுதி பெற்றள்ளார்.

5. மணிஷ் கவுசிக் எந்த விளையாட்டு துறையை சார்ந்தவர்?

**விடை** : குத்துச் சண்டை

**விளக்கம்**

- பெலிக்ஸ் ஸ்டாம் சர்வதேச குத்துச் சண்டை போட்டியில் இந்தியாவின் கவுரவ் சோலங்கி, மணீஷ் கவுஷிக் ஆகியோர் தங்கம் வென்றனர்.
    - போட்டி நடைபெற்ற இடம் - போலந்தில் உள்ள வர்சா நகர்
    - சோலங்கி 52 கிலோ பிரிவிலும், மணிஷ் கவுசிக் 60 கிலோ எடை பிரிவிலும் கலந்து கொண்டனர்.

6. மகளிர் WTA தரவரிசையில் முதலிடத்தில் இருப்பவர் யார்?

**விடை**: நவோமி ஒஸாகா

**விளக்கம்**

- ஏடிபி தரவரிசையில் 3-ஆவது இடத்துக்கு முன்னேறினார் ஜாம்பவான் ரோஜர் பெடரர்.

- முதலிடத்தில் உள்ளார் செர்பியாவின் ஜோகோவிச். இரண்டாவது இடத்தில் நடால் உள்ளார். கிரீஸ் வீரர் சிட்சிபாஸ் 9-ஆவது இடத்துக்கு முன்னேறினார்.
- மகளிர் டபிள்யுடிஏ தரவரிசையில் ஜப்பானின் நவோமி ஒஸாகா முதலிடத்திலும், செக குடியரசு பெட்ரா குவிட்டோவா இரண்டாவது, ருமேனியாவின் சிமானோ ஹலேப் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

7. கௌரவ் சோலங்கி என்னும் விளையாட்டு வீரர் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

**விடை**: குத்துச்சண்டை

**விளக்கம்**

- போலந்து தலைநகரான வார்சாவில் நடைபெற்ற 36 ஆவது ஃபெலிக்ஸ் ஸ்டாம் சர்வதேச குத்துச்சண்டை போட்டியில், இந்திய வீரர்கள் கௌரவ் சோலங்கி, மணீஷ் கௌசிக் ஆகியோர் தங்கம் வென்றனர்.
  - சோலங்கி 52 கிலோ எடைப் பிரிவில் இங்கிலாந்து வீரர் வில்லியம் காவ்லேவை எதிர்கொண்டார். இதில், 5-0 என்ற கணக்கில் வென்றார் சோலங்கி.
  - கடந்த ஆண்டு நடைபெற்ற காமன்வெல்த் போட்டியில் ஃபிளை வெயிட் பிரிவில் அவர் தங்கம் வென்றிருந்தார்.
  - காமன்வெல்த் போட்டியில் லைட் வெயிட் பிரிவில் வெள்ளி வென்ற மணீஷ் கௌசிக், ஃபெலிக்ஸ் ஸ்டாம் போட்டியில் 60 கிலோ பிரிவில் போட்டியிட்டு தங்கம் வென்றார்.
  - இந்திய வீரர் ஹீசாமுதீன் (56 கிலோ எடைப் பிரிவு) வெள்ளியும், அரையிறுதி வரை முன்னேறிய மன்தீப் ஜங்ரா (69 கிலோ), சஞ்சீத் (91 கிலோ), அங்கித் கடானா (64 கிலோ) வெண்கலமும் வென்றனர்.

8. 2019 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னனி ஸ்பான்சர் யார்?

**விடை** : அமுல்

**விளக்கம்**

- ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் முக்கிய ஸ்பான்சராக அமுல் அறிவிக்கப்பட்டுள்ளார்.

- ○ எதிர்வரும் உலகக் கோப்பையில், மே 30 முதல் இங்கிலாந்திலும், வேல்ஸ் நகரத்திலும் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

9. 36-வது தேசிய இளையோர் கூடைப்பந்து போட்டி எங்கு நடைபெறுகிறது?

**விடை**: கோவை

**விளக்கம்**

- கோவையில் 36-வது தேசிய அளவிலான இளையோர் கூடைபந்து போட்டி நடைபெறுகிறது.
  - 57 ஆண்டுகளுக்குப் பிறகு கோவையில் தேசிய கூடைபந்து போட்டி நடைபெறுகிறது.
  - 25 மாநிலங்களில் இருந்து 16 வயதுக்கு உட்பட்ட 700-க்கும் மேற்பட்ட வீரர் வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர்.

10. 2019 – ஆம் ஆண்டின் ஐபிஎல் தொடரில் வெற்றி பெற்ற அணி எது?

**விடை** : மும்பை இந்தியன்ஸ்

**விளக்கம்**

- 2019 – ஐபிஎல் தொடரின் இறுதி போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸை வீழ்த்தி மும்பை இந்தியன்ஸ் நான்காவது வெற்றியை கைபற்றியது.

11. ICC யின் ODI பந்து வீச்சாளர் தரவரிசையில் முதலிடத்தில் இருப்பவர் யார்?

**விடை**: ஜீலன் கோஸ்வாமி

**விளக்கம்**

- பாகிஸ்தானின் ஆ.ஃப் - ஸ்பின்னரான கிரிக்கெட் வீரர் சான மிர், ODI வரலாற்றில் சிறந்த சுழல்பந்து வீச்சாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
  - இவர் 147வது விக்கெட்டை எடுத்து இந்த சாதனையை உறுதி செய்தார்.
  - ICC – யின் ODI பந்து வீச்சாளர் தரவரிசையில் இவர் மூன்றாம் இடத்தில் உள்ளர். முதலிடத்தில் இந்தியாவின் ஜீலன் கோஸ்வாமி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

12. 2019 - ஸ்பானிஷ் கிராண்ட பிரிக்ஸை வென்றவர் யார்?

**விடை**: மெர்சிடிஸ் லூயிஸ் ஹாமில்டன்

**விளக்கம்**

- மெர்சிடிஸ் லூயிஸ் ஹாமில்டன் ஸ்பெயினின் பார்சிலோனாவில் ஸ்பானிஷ் கிராண்ட பிரிக்ஸை வென்றார் மற்றும் ஃபார்முலா ஒன் உலக சாம்பியன்ஷிப்பின் தரவரிசையில் மேலும் உயர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

13. ஐ.சி.சி நடுவர் குழுவில் இணைந்துள்ள முதல் இந்திய பெண் நடுவர் யார்?

**விடை**: G.S. லக்ஷ்மி

**விளக்கம்**

- சர்வதேச கிரிக்கெட் போட்டி நடுவர்கள் குழுவில் முதல் முறையாக இந்தியாவை சேர்ந்த G.S லக்ஷ்மியை ஐ.சி.சி நியமித்துள்ளது.
    - சர்வதேச போட்டித் தொடர்களில் இந்த நடுவர் குழுவில் இடம் பெற்றிருக்கும் நடுவர்களே பணியாற்றுவர்.
    - ஆண்கள் மட்டுமே இடம் பெற்றிருந்த ஐ.சி.சி நடுவர் குழுவில் பெண் நடுவரான G.S. லக்ஷ்மியும் இணைந்திருப்பதன் மூலம் இனி பெண் நடுவர்களும் பணிபுரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

14. மாட்ரிட் ஓபனில் சாம்பியன் பட்டம் வென்றாவர் யார்?

**விடை**: ஜோகோவிச்

**விளக்கம்**

- மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டி ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஜோகோவிச் சாம்பியன் பட்டம் வென்றார்.
    - செர்பியாவின் ஜோகோவிச் 3-வது முறையாக மாட்ரிட் ஓபனில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
    - தற்போது உலக டென்னிஸ் தரவரிசையிலும் முதல் இடத்தில் உள்ளார்.

15. ஆசிய பசிபிக் வைரகோப்பை போட்டியில் இந்தியாவின் ராகில் கான்ஜி எத்தனையாவது இடத்தில் உள்ளார்?

**விடை**: 39வது

**விளக்கம்**

- இந்தியாவின் ராகில் கான்ஜி ஆசியா பசிபிக் வைர கோப்பையில் 39-வது இடத்திலுள்ளார்.
    - இதில் முதலிடத்தில் ஜப்பானின் யோசுகே அசாஜி முதலிடம் பெற்றார்.
    - இது ஜப்பானில் நடைபெற்றது.

16. இத்தாலிய ஓபன் டென்னிஸ் போட்டி 2019 ஆம் ஆண்டு பெண்கள் ஒற்றையர் பிரிவில் வென்றவர் யார்?

**விடை**: கரோலினா பிளிஸ்கோவா

**விளக்கம்**

- செக் குடியரசை சார்ந்த கரோலினா பிளிஸ்கோவா பிரிட்டனை சேர்ந்த ஜோஹன்னா கோண்டாவை எதிர்கொண்டு மகளிர் டென்னிஸ் அசோசியேஷனின் இத்தாலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்றார்.
    - இத்தாலிய ஓபன் டென்னிஸ் போட்டி ரோம் நகரில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது

17. இந்திய மகளிர் அணியின் ஹாக்கி போட்டி எங்கு நடைபெற்றது?

**விடை**: ஜின்சியோனில்

**விளக்கம்**

- தென் கொரியாவுக்கு எதிரான ஹாக்கி இந்திய மகளிர் அணி 2 -1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.
    - தென் கொரியாவில் சுற்றுப் பயணம் செய்து வரும் இந்திய மகளிர் ஹாக்கி அணி மூன்று ஹாக்கி போட்டிகள் கொண்ட இரு தரப்பு தொடரில் பங்கேற்று வருகின்றன. இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதல் ஹாக்கிப் போட்டி நேற்று ஜின்சியோனில் நடைபெற்றது.

18. 2019-ஆம் ஆண்டு சர்வதேச ஓபன் குத்துசண்டை போட்டி எங்கு நடைபெற்றது?

**விடை** : கௌஹாத்தி

**விளக்கம்**

- கௌஹாத்தியில் நடைபெற்ற 2019-ஆம் ஆண்டு சர்வதேச ஓபன் குத்துச்சண்டை போட்டியில் இந்தியா மொத்தமாக 57 பதக்கங்களை பெற்றுள்ளது.
    - 12 தங்கம், 18 வெள்ளி மற்றும் 27 வெண்கலமாகும்.

- மேரி கோம், சிவா தாபா, எல்.சரிதா தேவி மற்றும் நமன் தான்வர் தங்கம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

19. அபூர்வி சாண்டிலா எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

**விடை**: துப்பாக்கி சுடுதல்

**விளக்கம்**

- இந்தியாவின் அபூர்வி சாண்டிலா ISSF உலக கோப்பை ரைபிள் போட்டியில் பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் தங்கம் வென்றுள்ளார்
  - இது ஜெர்மனியிலுள்ள முனிச் நகரில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

20. சௌரவ் சௌதரி என்னும் விளையாட்டு வீரர் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவராவர்?

**விடை**: துப்பாக்கி சுடுதல்

**விளக்கம்**

- உலகக் கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் இளம் வீரர் சௌரவ் சௌதரி, மகளிர் பிரிவில் ராஹி சர்னோபட் ஆகியோர் தங்கம் வென்றனர்.
  - ஜெர்மனியின் மியுனிக் நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஏற்கெனவெ மகளிர் பிரிவில் அபூர்வி சந்தேலா தங்கம் வென்றிருந்தார்.
  - இந்நிலையில் தனது முந்தைய உலக சாதனையை 245 புள்ளிகளை முறியடித்து 246.3 புள்ளிகளுடன் தங்கம் வென்றார் சௌரவ் சௌதரி.

21. 2019 ஆம் ஆண்டின் உலக கலப்பு அணி பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியான சுதிர்மேன் கோப்பையை வென்றது யார்?

**விடை** : சீனா

**விளக்கம்**

- சீனாவின் நானிங்கில் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டின் உலகக் கலப்பு அணி பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியான சுதிர்மேன் கோப்பையை சீனா வென்றுள்ளது.
  - சீனா ஆண்கள் இரட்டையர் பிரிவு பெண்கள் ஒற்றையர் பிரிவு மற்றும் ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆகியவற்றில் ஜப்பானை வீழ்த்தி 11-வது

முறையாக இந்தப் பட்டத்தை வென்றுள்ளது. ஜப்பான் இதுவரை சுதிர்மேன் கோப்பையை வென்றதில்லை.

## வர்த்தக நிகழ்வுகள்

1. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் என்ன?

**விடை**: 7.3 சதவிகிதம்

**விளக்கம்**

- இந்தியாவின் மதிப்பீடுகள் மற்றும் ஆராய்ச்சிகளின் (Ratings & Research) மொத்த உள்நாட்டு, உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் 2019-20 நிதி ஆண்டில் 7.3 சதவீதமாக குறைந்துள்ளது.

2. ‘உதயம்’ என்னும் திறன் மேம்பாட்டு மையம் LIC- ஆல் எங்கு தொடங்கப்பட்டது?

**விடை**: பெங்களூர்

**விளக்கம்**

- LIC வீட்டுவசதி நிதி (LIC HFL) பெங்களூரில் ஒரு திறன் மேம்பாட்டு மையமான ‘உதயம்’ -த்தை அறிமுகப்படுத்தியுள்ளது
    - இது லோக் பாரதி கல்வி சங்கத்துடன் இணைந்து செயல்படும் என்பது குறிப்பிடத்தக்கது

3. ∴பேம் (FAME) திட்டத்தின் திட்டகாலம்?

**விடை** : 2030

**விளக்கம்**

- ∴பேம் திட்ட வெற்றிக்கு உள்நாட்டு பங்களிப்பு அவசியம் என இந்திய தொழில் துறை கூட்டமைப்பு கருத்து தெரிவித்துள்ளது.
    - எலெக்ட்ரிக் வாகன பயன்பாட்டை ஊக்குவிக்க மத்திய அரசு ∴பேம் (FAME) திட்டத்தை கொண்டு வந்தது.
    - திட்டத்தின் நோக்கம் - 2030-ம் ஆண்டுக்குள் இந்தியா எலெக்ட்ரிக் வாகன பயன்பாட்டில் தன்நிறைவு பெறுவது.

**4.** மிகவும் மதிப்புமிக்க வங்கி (most valued bank) என்னும் பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் வங்கி எது?

**விடை**: HDFC வங்கி.

**விளக்கம்**

- மிகவும் மதிப்புமிக்க வங்கி என்னும் பட்டியலில் முதல் முறையாக தனியார் வங்கியான YES வங்கி 3 நிலைகள் பின்தள்ளி 10-வது இடத்தில் உள்ளது
    - இந்தப் பட்டியலின் முதலிடத்தில் HDFC வங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

**5.** 2018-19 நிதியாண்டின் வங்கி கடன் சதவீதம் என்ன?

**விடை** : 13.2%

**விளக்கம்**

- 2018-19 நிதியாண்டில் வங்கி கடன் சதவீதம் 13.2% மாக வளர்ச்சியடைந்துள்ளது.
    - கடந்த நிதியாண்டின் வங்கி கடன் 10.3% சதவீதமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.
    - அதனுடன் வைப்பு தொகையும் 6.7% சதவீதத்திலிருந்து இந்த ஆண்டு 10% சதவீதமாக உயர்ந்துள்ளது.

**6.** 7-வது பொருளாதார கணக்கெடுப்பு எப்போது தொடங்குகிறது?

**விடை** : ஜுன் 1

**விளக்கம்**

- பொருளாதாரக் கணக்கெடுப்புக்கு செல்லிடப்பேசி செயலிகளைப் பயன்படுத்த மத்திய புள்ளியில் துறை அமைச்சகம் திட்டம்.
    - நாட்டின் 7-வது பொருளாதார கணக்கெடுப்பு ஜீன்1 அன்று தொடங்குகிறது.

**7.** கார்ப் SME சுவிதா (Corp SME Suvidha) என்னும் திட்டத்தை வெளியிட்டவர் யார்?

**விடை** : P.V. பாரதி

**விளக்கம்**

- GST இல் பதிவு செய்த MSME நிறுவனங்களுக்காக கார்ப்பரேஷன் வங்கி "கார்ப் SME சுவிதா" (Corp SME Suvidha) என்னும் திட்டத்தை அறிமுகப்படுத்தயுள்ளனர்.
    - இதனை அந்த வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியான P.V. பாரதி மங்களூருவில் வெளியிட்டார்.

8. அயல்நாட்டுச் சந்தையில் மசாலா பத்திரத்தை பட்டியலிடும் முதல் இந்திய மாநிலம் எது?

**விடை** : கேரளா

**விளக்கம்**

- கேரள உட்கட்டமைப்பு முதலீட்டு நிதி வாரியத்தின் மூலம் வழங்கப்பட்ட மசாலா பத்திரங்களை பட்டியலிடுவதன் மூலம் பன்னாட்டுச் சந்தையை அணுகும் நாட்டின் முதல் துணை இறையாண்மை நிறுவனமாக கேரளா மாறியுள்ளது. லண்டனை பங்குச்சந்தையில் வர்த்தகத்தை தொடங்கிய முதல் நாளன்று, அந்நாட்டின் தலைவரான பினராய் விஜயன் தலைவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

9. "Bank on Wheels" என்னும் வசதியை தொடங்கிய வங்கி எது?

**விடை**: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

**விளக்கம்**

- தமிழ்நாடு மற்றும் கேரளா மொத்தம் 14 மாவட்டங்களில் "சக்கரங்களில் வங்கி" "Bank on Wheels" என்னும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று இந்திய ஓவர்சீஸ் வங்கி (IOB) அறிவித்துள்ளது.
    - இந்த வசதி பொது மக்களுக்கு, குறிப்பாக மூத்த குடிமக்களுக்கு உதவும் வகையில் முக்கிய மாவட்டங்களில் குறிப்பிட்ட இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது

## முக்கிய தினங்கள்

1. சர்வதேச ஜாஸ் தினம் என்று கொண்டாடப்படுகிறது?

**விடை** ஏப்ரல் 30

**விளக்கம்**

- சர்வதேச ஜாஸ் தினம் ஏப்ரல் 30 அன்று ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.
    - இது 2011 இல் ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பால் அறிவிக்கப்பட்ட ஒரு சர்வதேச தினமாகும்.
    - இந்நாள் UNESCO நல்லெண்ண தூதரும் ஜாஸ் பியானிஸ்ட்டுமான ஹெர்பி ஹான்காக் என்பவரால் கொண்டுவரப்பட்டது என்பது குறிப்பிடதக்கது.

2. சர்வதேச தொழிலாளர்கள் தினம் எந்த நாளில் கொண்டாடப்படுகிறது?

**விடை**: மே 1

**விளக்கம்**

- மே 1 ஆம் தேதி சர்வதேச தொழிலாளர் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இது தொழிலாளர்களின் நலனை ஊக்குவிப்பதற்காக இந்நாள் கொண்டாடப்படுகிறது.
    - இதனை மே தினம் என்றும் அழைப்பர்.
    - இதன் மையக்கருத்து : "அனைவருக்கும் நிலையான ஓய்வூதியம் : சமூக பங்குதாரர்களின் பங்கு" " சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக தொழிலாளர்களை ஒன்றிணைத்தல்"

3. உலக டூனா (tuna) தினம் என்று கொண்டாடப்படுகிறது?

**விடை:** மே- 2

**விளக்கம்**

- மே 2 ஆம் நாள் உலன டூனா கடல் சூழல் அனுசரிக்கப்படுகிறது. இது கடல் சூழல் மற்றும் உலகபொருளாதாரத்தில் இம்மீனின் முக்கியத்துவத்தை நினைவுபடுத்துவதற்காக அனுசரிக்கப்படுகிறது.

4. சர்வதேச பத்திரிக்கை சுதந்திர தினம் என்று கொண்டாடப்படுகிறது?

**விடை**: மே- 3

**விளக்கம்**

- சர்வதேச பத்திரிக்கை சுதந்திர தினம் மே 3 அன்று அனுசரிக்கப்படுகிறது.

- ○ 2019 ஆண்டிற்கான கருத்துரு: “ஜனநாயகத்திற்கான ஊடகம்: பத்திரிக்கை மற்றும் தவறான தகவல்களில் தேர்வுகள்” Theme- “Media for Democracy : Journalism & Elections in Times of Disinformation”.
- ○ 2019 ஆம் ஆண்டு எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பால் (Reporters without Boders) நடத்தப்பட்ட ஆய்வில் உலகளவில் 180 நாடுகளின் பட்டியலில் பத்திரிக்கை சுதந்திரத்தில் இந்தியா 140 வது இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடதக்கது.
- ○ இது ஐ.நா பொது சபையினால் டிசம்பர் 1993 இல் அறிவிக்கப்பட்டது.

5. “பாரத் ∴பைபர்” என்னும் சேவை முதன் முதலில் எங்கு தொடங்கவுள்ளது?

**விடை**: புல்வாமா

**விளக்கம்**

- அரசுக்கு சொந்தமான தொலை தொடர்பு நிறுவனமான BSNL புல்வாமாவில் ஆப்டிகல் ∴பைபர் சார்ந்த அதிவேக பிராட்பேண்ட் சேவையை முதன்முதலில் தொடங்கவுள்ளது.
    - ○ அதன் பெயர் “பாரத் ∴பைபர்” (Bharat Fibre) என்பதாகும் .

6. மங்களுருவில் தொடங்கப்பட்ட அனைத்து மகளிர் ரோந்து படையின் பெயர் என்ன?

**விடை**: ராணி அபாக்கா படை

**விளக்கம்**

- மங்களுரு போலீஸ் கமிஷனர் சந்தீப்பால் மகளிர் மற்றும் குழந்தைகள் தொடர்பான பிரச்சனைகளை கையாளுவதற்கான பெண்கள் மட்டுமே கொண்ட போலீஸ் ரோந்து பிரிவான “ராணி அபாக்கா படையை” துவக்கி வைத்தார்.
    - ○ 16 ஆம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர்களுடன் போராடிய உல்லாலின் ராணியான அபாக்கா அவர்களது நினைவாக இப்பெயர் சூட்டப்பட்டது.

7. ஜெர்மானிய தத்துவ ஞானி கார்ல் மாக்ஸ் பிறந்த தினம் எது?

**விடை** : மே 5

**விளக்கம்**

- ஜெர்மானிய தத்துவ ஞானி கார்ல் மாக்ஸ் பிறந்த தினம் மே 5.

- ○ பொதுவுடைமை கொள்கையின் தந்தையாக இவர் கருதப்படுகிறார்.

8. தபால் தலை எந்த ஆண்டு இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது?

**விடை**: 1854

**விளக்கம்**

- இந்தியாவில் முதல் தபால் தலை 1854 மே 6-ம் தேதி வெளியிடப்பட்டது.
  - ○ 1854-ம் ஆண்டு டல்ஹௌசி பிரபு அரையான தபால் தலை முறையை கொண்டு வந்தார்.
  - ○ நவீன இந்தியாவின் சிற்பியாக டல்ஹௌசி பிரபு போற்றப்படுகிறார்.

9. உலக தடகள தினம் என்று கொண்டாடப்படுகிறது?

**விடை** : மே 7

**விளக்கம்**

- மே 7 ஆம் தேதி ஆண்டுதோறும் உலக தடகள தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - ○ சிறார்கள் மற்றும் இளைஞர்களிடையே இவ்விளையாட்டை ஊக்குவிப்பதற்காக இது கொண்டாடப்படுகிறது.
  - ○ சர்வதேச தடகள ∴ பெடரேஷன்னால் இது முதன் முதலில் 1996 ஆண்டு கொண்டாடப்பட்டது.

10. உலக ஆஸ்துமா தினத்தின் மையக்கருத்து என்ன?

**விடை**: “ஆஸ்துமாவிற்குத் தடை” – “STOP for Asthma”

**வளக்கம்**

- மே 7 ஆம் தேதி உலக ஆஸ்துமா தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - ○ இது GINA (Global Inititative for Asthma), உலக ஆஸ்துமா அறக்கட்டளை மற்றும் தேசிய இதய நுரையீரல் மற்றும் இரத்த நிறுவனம் (NHLB) ஆகியோரால் ஆதரிக்கப்படுகிறது.
  - ○ மைய கருத்து: “ஆஸ்துமாவிற்குத் தடை” – “STOP for Asthma”.
  - ○ STOP என்பது Symptom evaluation, Test response. Observe and assess, Proceed to adjust treatment.

11. 2019 ஆண்டின் உலக செஞ்சிலுவை தினத்தின் மையக்கருத்து என்ன?

**விடை**: # அன்பு

**விளக்கம்**

- உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாள் மே 8-ம் நாளன்று அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. முதலாவது நோபல் விருதைப் பெற்றவரும் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆரம்பகார்த்தாவுமான ஹென்றி டியூனண்ட் பிறந்த நாளான (மே 8, 1828) இந்நாள் 1948-ம் ஆண்டிலிருந்து சிறப்பு நாளாக அங்கீகரிக்கப்பட்டது.
    - இந்த ஆண்டுக்கான மையக்கருத்து “# அன்பு” என்பதாகும்
    - Theme – “# love”

12. உலக தலசீமியா தினம் என்று கொண்டாடப்படுகிறது?

**விடை** : மே 8

**விளக்கம்**

- உலக தலசீமியா தினம் மே 8 அன்று கொண்டாடப்பட்டது.
    - இந்நாளின் மையக்கருத்து: “அனைவருக்கும் தரமான தலசீமியா சுகாதார சேவைகள்: நோயாளிகளுக்காக நோயாளிகளுடன் இணைந்து செயல்படுதல்”.

13. ரவீந்திரநாத் தாகூரால் தொடங்கப்பட்ட பல்கலைகழகத்தின் பெயர் என்ன?

**விடை** : விஷ்வ பாரதி பல்கலைகழகம்

**விளக்கம்**

- வங்காள இலக்கியம் மற்றும் இசையை மறுசீரமைத்த இந்தியாவின் முதல் நோபல் பரிசு பெற்றவர் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் 158 வது பிறந்த நாள் 2019 ஆம் ஆண்டு மே 9 ஆம் தேதி அனுசரிக்கப்பட்டது.
    - அவர் சாந்தி நிகேதனத்தில் விஷ்வ பாரதி பல்கலைக்கழகத்தை தொடங்கினார்.
    - ரவீந்திரநாத் தாகூரின் பிறந்த நாள் பொசிஷே போயிஷாக் (Pochise Boishakh) 2019 என்று அழைக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

14. உலகளாவிய சாலை பாதுகாப்பு வாரம் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்படுகிறது?

**விடை** : இரண்டு

**விளக்கம்**

- 5வது ஐக்கிய நாடுகளின் உலகளாவிய சாலை பாதுகாப்பு வாரம் மே 6 முதல் 12, 2019 வரை அனுசரிக்கப்படுகிறது. இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்படுகிறது.
    - இதற்கான மையகருத்து : “சாலை பாதுகாப்புக்கான தலைமைத்துவம்” என்பது தான்
    - Theme : “ Leadership for Road Safety”

15. Year of Next of kin எந்த ஆண்டு அனுசரிக்கப்பட்டது?

**விடை** : 2019

**விளக்கம்**

- இந்திய இராணுவத்தினால் 2019-ஆம் ஆண்டு அடுத்த உறவினரின் ஆண்டு (Year of Next of kin) என்று அனுசரிக்கப்படுகிறது.
    - இதன் மூலம் போரில் உயிரிழந்த வீரரின் குடும்பத்தினர், முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் பணியாற்றும் இராணுவ வீரர்களுக்கான நலதிட்டங்கள் (ம) ஓய்வூதியம் தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க திட்டமிட்டுள்ளனர்.

16. யாருடைய பிறந்த நாளை முன்னிட்டு செவிலியர் தினம் கொண்டாடப்படுகிறது?

**விடை**: ∴ப்ளோரன்ஸ் நைட்டிங்கேலின்

**விளக்கம்**

- மே 12 சர்வதேச செவிலியர் தினம்
    - ∴ப்ளோரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்த தினத்தை முன்னிட்டு மே 12-ம் நாள் செவிலியர் தினமாக கொண்டாடப்படுகிறது.

17. உலக குடும்ப தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

**விடை** : மே 15

**விளக்கம்**

- உலக குடும்ப தினம் மே 15

- ○ குடும்பத்தை சமத்துவத்தோடு நடத்துவது குடும்ப வன்முறையை தடுத்தல் போன்ற விழிப்புணர்வுகளை குடும்பங்களில் ஏற்படுத்த ஆண்டு தோறும் மே-15 சர்வதேச குடும்ப தினம் கொண்டாடப்படுகிறது.

18. இந்திய நீர்ப் பாசனத்தின் தந்தை என அறியப்படுபவர் யார்? அவர் பிறந்த தினம்?

**விடை** : சர் ஆர்தர் காட்டன், மே 15

**விளக்கம்**

- "இந்திய நீர்ப் பாசனத்தின் தந்தை" என அறியப்படும் சர் ஆர்தர் காட்டன் பிறந்த தினம் மே 15

19. உலக தேனீக்கள் தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

**விடை** : மே 20

**விளக்கம்**

- மே 20, 2019 ஆம் நாள் உலக தேனீக்கள் தினமாக அனுசரிக்கப்படுகிறது
    - ○ 18-ஆம் நூற்றாண்டில் தேனீ வளர்ப்பு முறையில் புதிய முறையை கொண்டு வந்தவரான அன்டன் ஜான்சாவின் பிறந்த நாள் மே 20 என்பது குறிப்பிடத்தக்கது.

20. SI எந்த ஆண்டு கொண்டுவரப்பட்டது?

**விடை**: 1875

**விளக்கம்**

- ஒவ்வொரு ஆண்டும் மே 20 ஆம் தேதி உலக அளவியல் (Metrology) தினம் கொண்டாடப்படுகிறது
    - ○ முதன் முதலாக 1875ஆம் ஆண்டு 17 நாடுகள் ஒன்று சேர்ந்து உலகில் உள்ள அனைத்து நாடுகளும் ஒரே அளவினை பயன்படுத்த சர்வதேச அளவியலை உருவாக்கினர். இதன் மூலமாக வெவ்வேறிடத்தில் உற்பத்தியாகும் பொருட்களை ஒன்றிணைக்க சர்வதேச அளவியல் பயன்படுகிறது.
    - ○ இந்நாளின் 2019 ஆம் ஆண்டிற்கான மையக்கருத்து "அலகுகளின் சர்வதேச அமைப்பு (SI) அடிப்படையில் சிறந்தது" என்பதாகும்

- The theme of World Metrology Day 2019 is “The International System of Units Fundamentally better”

21. 2019 ஆம் ஆண்டின் சர்வதேச பல்லுயிர் தன்மை தினத்தின் மையக்கருத்து என்ன?

**விடை**: “ நம் பல்லுயிர்தன்மை, நம் உணவு, நம் ஆரோக்கியம்

**விளக்கம்**

- மே 22, 2019 சர்வதேச பல்லுயிர் தன்மையின் தினமாக அனுசரிக்கப்படுகிறது
  - இந்நாள் ஐக்கிய நாடுகளின் பொது சபையால் 1993 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது.
  - இந்நாளின் மையக்கருத்து “ நம் பல்லுயிர்தன்மை, நம் உணவு, நம் ஆரோக்கியம்

22. சுவிட்சர்லாந்து நாட்டின் தேசிய அறிவியல் தினம் எப்பொழுது கொண்டாடப்படுகிறது?

**விடை:** மே 26

**விளக்கம்**

- மே 26 சுவிட்சர்லாந்து நாட்டின் தேசிய அறிவியல் தினமாக கொண்டாடப்படுகிறது.
  - காரணம்- முன்னாள் குடியரசு தலைவர் அப்துல்கலாம் குடியரசு தலைவராக இருந்த போது சுவிட்சர்லாந்து நாட்டிற்கு மே 26, 2005 சுற்றுபயணம் மேற்கொண்டார். அதன் நினைவாக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

23. உலக தைராய்டு தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

**விடை** : மே 25

**விளக்கம்**

- மே 25 ஆம் நாள் உலக தைராய்டு தினமாக அனுசரிக்கப்படுகிறது.
  - தைராய்டு குறைபாடு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக 2008 ஆம் ஆண்டு முதன்முதலாக அமெரிக்க தைராய்டு கழகம் (AIA) மற்றும் ஐரோப்பிய தைராய்டு கழகம் (ETA) இணைந்து இந்நாளை கொண்டாடினர் என்பது குறிப்பிடத்தக்கது.

**24.** 2019 ஆம் ஆண்டின் சர்வதேச ஐ.நா அமைதி படை வீரர்களின் தினத்தின் கருத்துரு என்ன?

**விடை**: ‘‘குடிமக்களை பாதுகாத்தல், அமைதியை பாதுகாத்தல்’’

**விளக்கம்**

- ஒவ்வொரு ஆண்டும் மே 29 அன்று சர்வதேச ஐ.நா அமைதிப் படை வீரர்கள் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
  - இத்தினமானது ஐ.நாவின் அமைதிக் காப்புப் பணிகளுக்கு மதிப்பிட இயலாத பங்களிப்புகளை அளித்த சீருடை மற்றும் குடிமக்கள் பணியாளர்களுக்கு மரியாதை செலுத்துவதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது.
  - 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு “குடிமக்களைப் பாதுகாத்தல், அமைதியைப் பாதுகாத்தல்” என்பதாகும்.
  - Theme: “Protecting Civilians Protecting Peace”.

25. மாதவிடாய் சுகாதார தினம் என்று கொண்டாடப்படுகிறது?

**விடை**: மே 28

**விளக்கம்**

- மாதவிடாய் சுகாதார தினம் என்ற ஒரு வருடாந்திர விழிப்புணர்வுத் தினமானது மே மாதம் 28 ஆம் தேதி அனுசரிக்கப்பட்டது.
  - இது சிறந்த மாதவிடாய் சுகாதார மேலாண்மையின் (menstrual hygiene management – MHM) முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.
  - இது ஜெர்மனியில் உள்ள அரசு சாரா அமைப்பான வாஷ் யுனைடெட் (WASH United) என்ற அமைப்பால் 2014 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
  - 1947ஆம் ஆண்டு முதல் ஜப்பானின் தொழிலாளர் சட்டங்கள் பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் விடுப்புகளை அளிக்கின்றது.

26. சர்வதேச எவரெஸ்ட் தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

**விடை:** மே 29

**விளக்கம்**

- சர்வதேச எவரெஸ்ட் தினம் ஒவ்வொரு ஆண்டும் 29 மே அன்று அனுசரிக்கப்படுகிறது
    - காத்மாண்டு, நேபாளம் மற்றும் எவரெஸ்ட் பிராந்தியத்தில் நினைவு நிகழ்வுகள் மற்றும் சிறப்பு நிகழ்வுகள் ஆகியவை கொண்டாடப்படுகிறது.
    - நியூசிலாந்தில் இருந்து சர் எட்மண்ட் ஹிலாரி மற்றும் நேபாளில் இருந்து டென்சிங் நோர்கே ஷெர்பா ஆகியோர் 29 மே 1953 அன்று எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தனர்.

# புத்தகம்

1. "காந்தி : தி ரைட்டர்" புத்தகத்தின் ஆசிரியர் யார்?

**விடை** : பாபாணி பட்டாச்சார்யா

**விளக்கம்**

- சமூக – யதார்த்த புனைவுகளை எழுதிய பாபாணி பட்டாச்சார்யா "காந்தி : தி ரைட்டர்" புத்தகத்தை எழுதினார்.
    - இவர் இந்தோ-ஆங்லியன் இலக்கியத்தின் சமூக ரியலிசம் பள்ளியை சேர்ந்தவர் என விவரிக்கப்படுகிறார்.


**Useful Links**

Recent Exam Notifications : https://weshineacademy.com/updated-exam-notification/

Daily Current Affairs : http://weshineacademy.com/tnpsc-current-affairs/

Recent Update on Telegram : https://t.me/weshinedailyupdate

Useful YouTube Video : https://www.youtube.com/user/weshineacademy

Apply for SSC MTS Exam : https://weshineacademy.com/ssc-mts-recruitment-notification-2019/